

# திருக்கோயில்



ஜூன்
2003

விலை
ரூ 7.00





மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் திருப்பணியைக் காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும், தமிழ் வளர்ச்சி, பண்பாடு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் இ.ஆ.ப. அவர்களும், இணை ஆணையாளர் (திருப்பணி) திருமிகு ப. ராஜா பிஎஸ்.சி.பிஎல். அவர்களும் சென்னை இணை ஆணையாளர் திருமிகு மு.க. பாலசுப்பிரமணியம் பி.ஏ. பி.எல் அவர்களும் இத்திருப்பணித் தொடக்க விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயில் துணை ஆணையாளர் / செயல் அலுவலர் திருமதி ந. திருமகள் எம்.ஏ.பிஎல். அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.



# திருக்கோயில்



திங்கள் இதழ்

தனி இதழ் : ரூ. 7.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 75.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 1000.00

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சுபானு - ஆனி | மணி |
|---|---|---|---|
| 45 | | ஜூன் 2003 | 6 |


சிறப்பாசிரியர்

**திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.**

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

**ஆசிரியர்**

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**

எம்.ஏ., பி.எச்.டி.

**''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்**

**திருமிகு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.

கூடுதல் ஆணையாளர்

**திருமிகு த. சுந்தரம்** பி.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமிகு ஆ. குப்புசாமி,** பி.ஏ. பி.எல்.

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திருமிகு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.

<u>முகப்பு</u>

**அருள்பாலிக்கும் ஆலிலைக் கண்ணன்**

## பொருளடக்கம்

திருஞான சம்பந்தரும் உலக சம்பந்தமும்

- திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., அரசுச் செயலாளர்

திருஞானசம்பந்தர் அருளிய இரண்டாம் திருமுறை

- முனைவர் த. அமிர்தலிங்கம்

சிவபுராணம் - 'திருமந்திரச் செம்மல்' டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

ஆன்மீகம் - திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. (ஓய்வு)

தசகண்ட இராவணன் (நீதிக்கதை)

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

திருநாமம் - டாக்டர் டி. செல்வராஜ்

ஆடிய பாதம் - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

மேல் சேவூர் அருள்மிகு மங்களாம்பிகை உடனுறை ரிஷிபுரீஸ்வரர் திருக்கோயில் - வெ. இராமமூர்த்தி

திருமண வரம் நல்கும் திருவிடந்தை அருள்மிகு நித்திய கல்யாணசுவாமி திருக்கோயில்

- திருமதி சீ. வசந்தி எம்.ஏ.பி.எல்.

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :




உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *28334811, 28334812, 28334813*



# திருஞானசம்பந்தரும், உலக சம்பந்தமும்

- திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.
அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும்
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, தலைமைச் செயலகம்.

மனித சமுதாயம் தோன்றிய நாள் முதல் பல் வேறு வகையில் அவர்கள் நல்வாழ்க்கை வாழ் வதற்காக அன்பையும் அற நெறியினையும் அவ்வப் போது அருளாளர்களும், ஆன்றோர்களும், சான் றோர்களும் தோன்றி போதித்து வந்ததுதான் வரலாறு. அப்பேர்ப்பட்ட அருளாளர்கள் எல்லாம் ஏதாவது ஒரு வகையில் ஒரு சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு மக்களை நெறிப்படுத்தவும், நல்வழிப் படுத்தவும் அதன் மூலம் இறைத் தொண்டுடன் சமூகத் தொண்டையும் செய்து வந்துள்ளனர்.

அந்த வகையில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், காரைக்கால் அம்மையார், இராமலிங்க அடிகள், ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர் போன்ற ஆன்மீகப் பெரி யோர்களும் சைவ வைணவ தர்மங்கள் மூலம் அள விடற்கரிய சேவையை செய்து வந்துள்ளனர்.

மக்களை நல்வழிப்படுத்த அவர்களோடு பல்வேறு வகைகளில் குறிப்பாக பக்தி இலக்கியங் களின் மூலம், பக்தி பரவசம் மூட்டும் இறைத் தொண்டின் மூலம், இறை நிகழ்வுகள் மூலம் மக்க ளோடு தங்களைச் சம்பந்தப்படுத்தி தங்கள் பக்கம் மக்களை ஈர்த்து நன்னெறி போதித்து வந்துள்ளனர். அந்த வகையில் பார்த்தால் நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பிய ஞானசம்பந்தப் பெருமான் ஆற்றிய பணி அரியதோர் பணியாகும்.

சேக்கிழார் பெருமான் அருளிய திருத் தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தில் மிக அதிகமான பாடல்களில் போற்றப்பட்டிருக்கும் திருஞானசம்பந்தர் பல்வேறு திருவிளையாடல் களைப் புரிந்து மக்களுக்கு நன்மை செய்து, மக்களோடு தொடர்புகொண்டு, மக்களை வாழ்வாங்கு வாழப் பல வகைகளிலும் தாம் வாழ்ந்த குறுகிய காலத்தில் போதித்த பெற்றியர் ஆவார்.

திருஞான சம்பந்தருடைய பாதமலர்களைத் தம் தலைமேல் சூடிக்கொண்டு, அவருடைய திருத் தொண்டைப் பரவுகின்றேன் என்று பாடிப் பரவசப் படுகின்றார் நம் சேக்கிழார் பெருமான்.

''வேதநெறி தழைத்து ஓங்க
மிகுசைவத் துறை விளங்கப்
பூதப் பரம்பரை பொலியப்
புனிதவாய் மலர்ந்து அழுத
சீதவள வயற் புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்''

என்று பாடும் சேக்கிழார் பெருமான் திருஞான சம்பந்தர் அவதாரம் செய்து இருக்காவிடில் வேதங்கள் இல்லை; நம் சைவ சமயம் இல்லை; சிவனடியார் கள் இல்லை; திருக்கோயில்களே இல்லை என்று ஆணித்தரமாக எடுத்து உரைத்து இருக்கக் காணு கின்றோம்.

சிவபாத இருதயர் எனும் தந்தைக்கும், பகவதியார் எனும் தாயாருக்கும் தவப்புதல்வராக பரசமயம் நிராகரித்து நீறாக்குவதற்காகக் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றியவர் நம் திருஞான சம்பந்தர்.

திருஞானசம்பந்தர் திரு அவதாரம் புரிந்த அப் பெருமையினால் தான் அவர் பிறந்த தமிழகம் தென் திசையில் உள்ள காரணத்தால் நான்கு திசைகளில் மேலான திசை தென் திசை தான் என்ற பெருமை உண்டானது என்றும், ஈரேழு பதினான்கு உலகங்களில் சிறந்தது புவியுலகே என்ற பெருமை இப்புவிக்கு உண்டானது என்றும், அனைத்து மொழிகளில் அவர் திருமுறை பாடிய காரணம் பற்றி மொழி களில் சிறந்தது தமிழ்மொழி என்ற பெருமை உண்டானது என்றும் திருஞானசம்பந்தர் தம் அவதாரப் பெருமையை நம் சேக்கிழார் பெருமான் பாடிப் பூரிப்படையவும் காணுகின்றோம்.

''திசை அனைத்தின் பெருமை எலாம்
தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிற உலகும்
மேதினியே தனிவெல்ல



அசைவில் செழுந் தமிழ்வழக்கே
அயல்வழக்கின் துறைவெல்ல..''
''சிவம் பெருக்கும் பிள்ளையார்
திரு அவதாரம் செய்தார்''

என்று திருஞானசம்பந்தரின் அவதாரச் சிறப்பைப் போற்றுகின்றார் நம் சேக்கிழார் பெருமான்.

நம் மானிடக் குழந்தைகள் யாவும் பிறந்ததும் அழும்; அப்படி அழாவிட்டால் குழந்தை ஊமையோ என்று பெற்றோர்கள் கவலை கொள்ள நேரும்.

இந்தத் தெய்வக் குழந்தையும் மூன்று வயதான போது சீர்காழிக் குளக்கரையில் அழுதது.

இந்த தெய்வக் குழந்தை அழுதபோது சைவ சமயம் தழைக்கப் போகிறது என்ற பேரானந்தப் பெருமகிழ்ச்சியில் எல்லா உயிர்களும் குதூகலம் அடைந்தது என்று பாடுகின்றார் நம் சேக்கிழார் பெருமான்.

தந்தையார் சிவபாத இருதயர் குழந்தையை ''பிரமதீர்த்தம்'' எனும் சீர்காழிக் கோயில் குளக்கரையில் அமர்த்திவிட்டுக் குளத்தில் மூழ்கி நீராடுகின்றார். ''அகமருடம்'' எனும் மந்திர செபம் செய்து குளத்திற் குள் மூழ்கிய தந்தையைக் கொஞ்ச நேரம் காண வில்லை. இந்தக் குழந்தை கோயில் கருவறையை நோக்கி ''அம்மா அப்பா'' என்று அழுகிறது.

அந்த அழுகைக் குரல் ஒலித்ததும் தோணி புரத்துக் கடவுள், உமையம்மையுடன் ரிஷப வாகனத்தில் எழுந்தருளிக் குளக்கரைக்கு எழுந்து அருளுகின்றார்.

''அழுகின்ற பிள்ளையார்க்கு
முலைப்பாலைப் பொன் வள்ளத்தில்
ஊட்டுக''

என்று சிவபெருமான் திருவருள்புரிய, அம்மை யும் தம் திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்தருளிச் சிவஞானம் ஆகிய இன்னமுதையும் சேர்த்துப் பிள்ளையார் கைகளில் கொடுத்து அவரது அழுகையை மாற்றிப் பாலமுதம் ஊட்டி விடுகின்றார்.

இந்த அற்புதத்தைச் சேக்கிழார் பெருமான்,

''எண்ணரிய சிவஞானத்து
இன்னமுதம் குழைத்தருளி
உண் அடிசில் என ஊட்ட
உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்து அருளிக்
கையிற்பொற் கிண்ணம் அளித்து

அண்ணலை அங்கு அழுகை தீர்த்து
அங்கணனார் அருள்புரிந்தார்''

என்று பக்திப் பரவசத்துடன் பாடி இருக்கின்றார்.

உலகத் தந்தையும் தாயும் ஆகிய இறைவர் இறைவியால் ஆட்கொள்ளப்பட்டபடியால் அக் குழந்தை ''ஆளுடைய பிள்ளையார்'' என்ற திரு நாமத்தைப் பெற்றது. ஞானப்பால் உண்டு சிவஞான சம்பந்தம் உண்டானதால் அத்தெய்வக் குழந்தைக்குத் ''திருஞானசம்பந்தர்'' என்பது திருப்பெயர் ஆயிற்று.

பள்ளியில் சென்று பயிலாமலேயே பரம் பொருளால், கலை ஞானம், மெய்ஞ்ஞானம் யாவும் பெற்று மூன்று வயதிலேயே திருமுறை பாடத் தொடங்கியது திருஞான சம்பந்தக் குழந்தை என்ற அற்புத வரலாற்றை நாம் அறிந்து அகம் பூரித்துப் போகின்றோம்.

குளத்தில் மூழ்கியிருந்த சிவபாத இருதயர் வெளியே வந்தவர் ஞானப்பால் வழிய ஆனந்தப் பரவசத்தில் வீற்றிருந்த குழந்தையைப் பார்த்து,

''யார் அளித்த பால் அடிசில் உண்டாய்?
பிறர் அளிக்கும் எச்சில்பால் உண்ணலாமா?''

என்று அதட்டுகின்றார்.

அதட்டுகின்ற அவர் அதிர்ச்சி அடைய,
அதிசயப்பட,

''தோடுடைய செவியன் விடை ஏறி ஓர்

தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிப்பூசி
என் உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள்
பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடையபிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே''

எனப் பாடுகின்றார்.

இந்த ஆனந்தக் காட்சியைக் கண்ட சிவபாத இருதயர் உள்ளமெல்லாம் பூரித்து பிள்ளையாரை தோளில் தூக்கிச் சென்று ஆராதித்தார். மறுநாள் விடியற்காலையில் திருக்கோலக்கா என்னும் பதியை அடைந்து வலம் வந்து கையினால் தாளமிட்டு,

''மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ''

என்று இனிய குரலில் இசைத்துக்கொண்டு வரும் போது அவ்வினிய குரலுக்கு இனிமை சேர்க்கும் வகையில் இறைவன் பஞ்சாக்கரம் வரையப்பெற்ற செம்பொற்றாளம் அருளினார்.

ஞானசம்பந்தர் தமது தாயாரின் பிறந்த ஊரான திருநனி பள்ளிக்குச் சென்றபோது அவ்வூர் பாலை நிலமாக இருக்கக் கண்டு அதிர்ச்சியுற்று, அவ்வூரின் எல்லையிலேயே நின்று, ஆண்டவனை எண்ணி,

''காரைகள் கூகைமுல்லை களவாகை யீகை
படர்தொடரி கள்ளி கவினிச்
சூரைகள் பம்மிவிம்மு சுடுகாட மர்ந்த
சிவன்மேய சோலை நகர்தான்
தேரைக ளாரைசாய மிதிகொள்ள வாளை
குதிகொள்ள வள்ளை துவள
நாரைக ளாரல்வாரி வயன்மேதி வைகும்
நனிபள்ளி போலும் நமர்காள்''

என்ற பதிகத்தை அருளி அப்பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கி அவ்வூர் மக்கள் செழிப்புடன் வாழ வழி வகுத்தார்.

இப்படி பல ஊர்களுக்கெல்லாம் சென்று தம் திருவடி நோக நடந்து நடந்து இறைப்பணியை ஆற்றி வந்த திருஞானசம்பந்தர் திருநெல்வாயில் அரத் துறைக்குச் செல்லும் வழியில் மாறன்பாடி என்னும் ஊரில் தங்கினார். அவர்திருவடி நோக நடந்து வந்ததைக் கண்ணுற்ற இறைவன் இரக்கம் கொண்டு அரத் துறை அன்பர்களுக்கு கட்டளையிடுகிறான். மறுநாள் இறைவனின் கட்டளைப்படி அரத்துறை அன்பர்கள் திருக்கோயிலில் இறைவனால் அருளப்பெற்ற முத்துச்சிவிகை, குடை, சின்னம் முதலியவற்றை எடுத்துச் சென்று வணங்கி அவர்பால் சேர்த்தனர். ஞானசம்பந்தரும் அவற்றை அன்புடன் ஏற்று இறைவனின் கருணையை வியந்து,

''எந்தை யீசனெம் பெருமான் ஏறமர் கடவுளென்
றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை
கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடுமபுனல் நிவாமல்கு
கரைமேல்
அந்தண் சோலைநெல் வாயில் அரத்துறை
யடிகள்தம் அருளே''

என்ற பதிகத்தினை அருளினார்.

இவ்வாறு ஆன்மீக நெறி தழைக்கவும், பக்தியுணர்வு ஓங்கவும் மக்களுக்கு நன்மை செய்துகொண்டு வரும்பொழுது சமண மதம் ஓங்கியிருந்த மதுரையில் ஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திற்கு சைவ மதத்தை வெறுத்த சமணர்கள் தீயிட்டனர். அதை அறிந்த சம்பந்தர் அத்தீ வெப்பு நோயாக

''செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே''

என்று பாடினார்.

சமணர்கள் சம்பந்தர்மீது இட்ட தீ வெப்பு நோயாக பாண்டியனைப் பற்றியது. பாண்டியன் அந்த வெப்பு நோயால் மிகவும் துன்புற்று அந் நோயைத் தீர்க்க பல வகைகளிலும் முயற்சித்து முடியாமல் போகவே திருஞானசம்பந்தரின் அருமையினையும், பெருமையினையும் அறிந்து தன் நோயைத் தீர்க்கும்படி அவரை அழைத்து வேண்டுகிறார். பாண்டியனின் வேண்டுகோளை ஏற்று அம்மன்னனின் வெப்புநோயைத் தீர்ப்பதற்கு,

''மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல
வாயான் திருநீறே''

என்று திருநீற்றுப் பதிகம் பாடி மன்னனுக்குத் திருநீறு பூசி வெப்பு நோயை நீக்கி அருளினார். பிறகு சமணர்களோடு அனல் புனல் வாதம் செய்து ''வாழ்க அந்தணர்'' என்ற பதிகத்தை அருளி, வைகை நதியில் ஏடு எதிர்சொல்லுமாறு செய்து, பாண்டியனை சைவனாக்கி பாண்டியநாட்டில் சைவ மதத்தை நிலை நாட்டினார்.

திருஞான சம்பந்தர் சோழ நாட்டிற்குச் செல்லும்போது முள்ளிவாய்க் கரையை அடைந்தார். ஆற்றில் வெள்ளம் பெருகி ஓடிற்று. ஓடம் செலுத்துவோர் ஒருவரும் இல்லை. மறுகரையில் இருந்த திருக்கொள்ளம் பூதூர் சென்று வணங்க விரும்பிய ஞானசம்பந்தர் ஓடத்தில் உடன் வந்த அடியவர்களை ஏற்றி,

''கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே''

என்ற பதிகத்தைப் பாடி அக்கரைக்குச் சென்று திருக்கொள்ளம்பூதூர் இறைவனை வழிப்பட்டார்.

தொண்டை நாட்டுத் திருவோத்தூரில் ஒரு சிவனடியார் இல்லத்தில் பனைமரங்கள் யாவும் ஆண் பனைகளாகவே இருந்தன. இதனை அறிந்து சமணர்கள் இவற்றைப் பெண் பனை ஆக்க இயலுமோ என ஏளனம் செய்து பேச திருஞானசம்பந்தர்

''பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை எண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாள் அங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே''

என்ற பதிகத்தை அருளி ஆண்பனைகளைப் பெண் பனைகளாக மாற்றினார். அவற்றில் பனங்காய்கள் நிறைய காய்த்துக் குலுங்கின.

திருமயிலாப்பூரில் சிவநேச செட்டியார் மகளாகிய பூம்பாவை திருஞான சம்பந்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்டவள். ஆனால் அவள் அரவு தீண்டி இறந்ததால் எலும்பாகச் சேமிக்கப்பட்டிருந்தாள். அதையறிந்த திருஞானசம்பந்தர்,

''மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்''


என்ற பதிகத்தைப் பாடி அவளை உயிர்த்தெழச் செய்தார்.

ஞானசம்பந்தர் தம் பெற்றோர்களின் விருப்பத்திற்கு இசைந்து திருநல்லூர்ப் பெருமணத்தில் திருமணம் புரிந்து கொண்டு தம் மனைவியுடன் சுற்றஞ் சூழ திருக்கோயிலுக்கு எழுந்தருளினார். கோயிலில் பெரும் சோதி தோன்றி வாயில் ஒன்றை வகுத்துக் காட்டியது. ஞானசம்பந்தர்,

''காத லாகிக் கசிந்துகண் ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே''

என்னும் நமச்சிவாயப் பதிகம் ஓதித் தம்முடன் வந்தோரையெல்லாம் அச்சோதியில் புகுமாறு அருளிப் பின்பு தாமும் தம் மனைவியுடன் சோதியுள் புகுந்து இறைவன் திருவடியுள் ஒன்றி உடனானார்.

அனைத்துத் தரப்பு மக்களும் கோளறு பதிகம் பாடி நன்மை பெற்றுவாழ,



''வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடி மேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம்வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே''

எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். இப் பதிகத்தை தினமும் பன்னிரண்டு முறை ஓதினால் நவகிரகங்களின் அனுகிரகம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. எனவே, இப்பதிகத்தை நாளும் ஓதி நவகிரகங்களின் நன்மைகளைப் பெறுவோம்.

இவர் வாழ்ந்த காலம் பதினாறு ஆண்டுகள் மட்டுமே என்றாலும், இவர் சாதித்தவை மிக மிக அதிகம்.

மேற்குறிப்பிட்டுள்ள அற்புத நிகழ்ச்சிகள் தவிர திருப்பாச்சிலாச்சிராமத்து இறைவர் அருளால் கொல்லிமழவன் எனும் மன்னனின் புதல்வியின் ''முயலகன்'' நோயைத் தீர்த்து அருளினார்.

திருக்கொடிமாடச் செங்குன்றூரில் அடியார்களுக்கு உண்டாகிய வெப்பு நோயை நீக்கினார். திருப்பட்டீச்சரத்தில் இறைவர் இவருக்கு முத்துப் பந்தல் அருளினார். திருவாவடுதுறையில் இவர் தந்தையாருக்காக ஆயிரம் பொன் அடங்கிய பொன் முடிப்பை இறைவர்தரப்பெற்றார். திருமருகலில் பாம்பு கடித்து மாண்ட வணிகனின் உயிரை மீளச் செய்தார். திருவீழி மிழலையில் படிக்காசு பெற்று பஞ்சம் நீங்கும் வரை சிவனடியார்களுக்கு உணவளித்தார். திருமறைக் காட்டில் வேதங்கள் பாடி அடைத்திருந்த பிரதானக் கதவைத் திருநாவுக்கரசர் திருப்பதிகம் பாடித் திறக்க, இவர் பாடித் திருக்கதவு மூடச் செய்தார். அதன் பிறகு கதவு திறக்கவும் மூடவும் உரியதாயிற்று.

இவ்வாறு மனித நேயம் கொண்டு மக்களுக்காக மகத்தான தொண்டு செய்துள்ள நம் திருஞான சம்பந்தர் மக்களுக்கு எந்த அளவிற்கு உதவினார் என்பது என்று அவர் அருள் வரலாறு மூலம் நாம் அறிய முடிகிறது. இறை நம்பிக்கை கொண்டு, எண்ணியதை முயற்சி செய்தால் முடிக்க முடியும் என்ற செய்தியை அவருடைய வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. 16 வயது இளமைப் பருவத்திற்குள் பாரோரை தம் வசப் படுத்தியதால் இக்கால இளைஞர்கள் அவர் போல் முயன்றால் எதையும் எண்ணியாங்கு சாதிக்க முடியும் என்று செப்புகின்றது இவர் வரலாறு.

ஆண்டவன் மீது தீராதக் காதல் கொண்டால் அகிலத்தையும் ஆளலாம் என்னும் உயரிய தத்துவத்தைக் கொண்டது இவரது வரலாறு.

துன்பம் வரும்பொழுது அதை நீக்க உதவ வேண்டும் என்ற மகத்தான வாழ்க்கைத் தத்துவத்தை - மனித நேயத்தை மிகவும் அற்புதமாக சித்தரிப்பது அவரின் வரலாறு. இவ்வரலாறு நம் வாழ்க்கை முறையினை கண்டிப்பாக மேம்படச் செய்யும் என்ற நம்பிக்கையுடன் ஞானசம்பந்தரின் ஞானப் பதிகங்களை பக்தியுடன் பாடி அவரின் பொற்பாதங்களை போற்றிப் பெருவாழ்வு வாழ்வோம் ஆக.

* * *

# திருஞானசம்பந்தர் அருளிய இரண்டாம் திருமுறை

- முனைவர் த. அமிர்தலிங்கம்

(முன் தொடர்ச்சி)

''சைவர் வாழ் மடத்து அமணர்கள் இட்டதீத்
தழல்போய்ப்
பையவே சென்று பாண்டியற்கு ஆகு''

எனத் திருஞானசம்பந்தர் பணித்தார். அவர் பணித்த வாறே அத்தீயானது

''விரிந்த வெந்தழல் வெம்மை போய்த்
தென்னனை மேவிப்
பெருத்தழற்பொதி வெதுப்பெனப் பெயர்
பெற்ற தன்றே''

பெருத்த வெப்பு நோயாகப் போய் பாண்டிய மன்னனைப் பற்றிக் கொண்டு விடுகிறது.

''அரசனுக்கு வெப்புநோய் கண்டுள்ளது'' என்று பணியாளர்கள் வந்து உரைத்ததைக் கேட்டுப் பதைபதைத்து மங்கையர்க்கரசியார் மன்னவன் இருக்கு மிடம் வருகிறார். குலச்சிறையாரும் விரைவாக அங்கு வந்து சேருகிறார்.

மன்னன் இருக்கும் அரண்மனையே பற்றி எரிந்துகொண்டிருந்தால் எப்படி தீயின் வெம்மை தகிக்குமோ அப்படி தகித்துக் கொண்டிருக்கின்றது. வாழையின் வளப்பமான மட்டைகளைக் கொண்டு வந்து அதில் பாண்டியனைப் படுக்க வைக்கிறார்கள். அவ்வாழை மட்டையும் மன்னவன் வெப்பு நோயினால் தீய்ந்து போகிறது என அவன் கொண்ட வெப்பு நோயின் கொடுமையை உணர்த்துகின்றார் சேக்கிழார்.

''உணர்வும் ஆவியும் ஒழிவதற்கு ஒரு புடை ஒதுங்க
அணைய வுற்றவர் அருகு தூரத்திடை அகலப்
புணர் இளங் கதலிக் குருத்தொடு தளிர்புடையே
கொணரி னுஞ் சுருக் கொண்டவை நுண் துகள்
ஆக''

''மருத்து நூலவர் தங்கள்பல் கலைகளில் வகுத்த
திருத்தகுந் தொழில் யாவையுஞ் செய்யவும்
மென்மேல்
உருத்தெழுந்த வெப்பு உயிரையும் உருக்குவ தாகக்
கருத்தொழிந்து உரைமறந்தனன் கௌரியர்
தலைவன்''

எனச் சேக்கிழார் பாண்டியன் உயிரை உருக்கியது வெப்புநோய் எனக் காட்டுகின்றார்.

அரண்மனை மருத்துவர்கள் செய்த சிகிட்சை ஒன்றும் பலன் அளிக்காமல் போகவே, சமணர்கள் வந்து தங்கள் அருகமந்திரங்களை ஓதி மயிற்பீலி கொண்டு மன்னவர் வெந்தழல்மேனியைத் தடவ, அம் மயிற்பீலிகள் பிணைக்கப்பட்டிருந்த பிரம்பினோடே எரிந்து தீய்ந்துபோய் விடுகின்றன. சமணர்கள் செய்யும் சிகிட்சையினால் வெப்பு நோய் தணிவதற்கு மாறாக, ''எரிதழல் சொரிந்த நெய் போல் ஆகி'' வெப்புநோயின் வெம்மை மேலும் மிக ''ஒருவரும் இங்கிராதுபோம்'' என்று அமணர்களைத் தூரப் போங்கள் என்று வெறுத்து உரைக்கின்றான் வெப்புநோயில் உழலும் பாண்டியன்.

இப்படிப்பட்ட நிலையிலே தான் மங்கையர்க் கரசி தேவியாரும், அமைச்சர் குலச் சிறையாரும் மன்னவன் அருகாகச் சென்று அடிபணிந்து ''இதற்குத் தீர்வுப் பிள்ளையார் அருளே'' என்று திருஞான சம்பந்தர் என்னும் திருநாம மந்திரத்தைச் சொல்லு கிறார்கள்.

''மேயவேணியர் பால் ஞானம் பெற்றவர்
விரும்பி நோக்கில்
தீயஇப் பிணியே இன்றிப் பிறவியும் தீரும்''

என்று ஞானசம்பந்தர் பெருமையை மங்கையர்க் கரசியாரும், குலச்சிறையாரும் கூற, அத்திருநாமத் தைக் கேட்டபோதே வெப்பு நோயின் வெம்மை சற்றுத் தணிதல் உணர்கின்றான் கூன்பாண்டியன்.

ஒரு பக்கம் நோயைத் தீர்க்கமாட்டாமல் நோயைப் பெருகச் செய்யும் சமணர்கள் நிற்கவும், மறுபக்கம் திருஞானசம்பந்தர் திருநாம மந்திரத்தைச் சொல்லி, நோயின் கடுமை குறைதற்குக் காரணமாய் மங்கையர்க்கரசியார் மற்றும் குலச்சிறையார் நிற்க வும் காணும் பாண்டியமன்னன் தம் தேவியார் பக்கம் திரும்பி



''முன்னிய சைவ நீதி
மாமறைச் சிறுவர் வந்தால்
அன்னவர் அருளால் இந்நோய்
அகலுமேல் அறிவேன்''

என்று கூறுகின்றார்.

சமணர்கள் பக்கம் திரும்பி

''யானுற்ற பிணியைத் தீர்த்து
வென்றவர் பக்கம் சேர்வேன்''

என்றும் கூறுகின்றான்.

மன்னவன் திருஞானசம்பந்தரை அழைக்கத் தம் இசைவைக் கூறியதும், அணை திறந்ததும் எப்படி வெள்ளம் பெருகி ஓடுமோ அதைப் போல மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் பக்தி வெள்ளம் பெருக, திருஞானசம்பந்தர் தங்கியிருக்கும் மடத்திற்கு விரைந்து வந்து சேர்கிறார்கள்.

''பாண்டிமாதேவியாரும் பரிவுடை அமைச்சனாரும் ஈண்டு வந்து அணைந்தார்'' என்று சிவனடியார்கள் விண்ணப்பம் செய்ய ''ஈண்டு அழையும்'' என்று அருளிச் செய்கிறார் நம் ஞான சம்பந்தர்.

பாண்டிமாதேவியாரும், குலச்சிறையாரும் ஒருங்குசென்று பெருகிய ஆர்வத்தோடு திருஞான சம்பந்தரைத் தரிசித்த அவ்வொப்பற்றக் காட்சியைச் சேக்கிழார் பெருமான்

''ஞானத்தின் திருவுருவை நான்மறையின்
தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்
மதிக்கொழுந்தைத்
தேன்நக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்
சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக்
கண்டார்கள்''

என்று பரவசத்தோடு பாடியிருத்தல் காணுகின்றோம்.

திருஞானசம்பந்தர்தம் தாமரைத் திருவடிகளின் கீழ் நிலமுற விழுந்து, கவலைக்கடற்கு ஓர் கரை கண்டார் போல் களிப்புடன் வணங்குகின்றார்கள் மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும்.

பூம்புகலி அண்ணலார் அடிபூண்ட இருவரையும், திருக்கையால் எடுத்தருளுகின்றார். ''திருவுடையீர்! உங்கள்பால் தீங்கு உளதோ?'' என்று வினவுகின்றார்.

உடனே பாண்டிய மன்னனுக்கு உற்ற வெப்பு நோயை எடுத்துக்கூறி ''யானுற்ற பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கல் சேர்வேன்'' எனப் பாண்டியன் அறிவித்திருப்பதையும் கூறி, ''மன்னவன் பிணியைத் தீர்த்து அவரை வெற்றிகொண்டருள வேண்டும்'' என்று விண்ணப்பம் செய்கின்றனர் பாண்டி மாதேவியாரும், குலச் சிறையாரும்.

''வெய்யதொழில் அமண்குண்டர்
விளைக்க வரும் வெதுப்பு அவர்தாம்
செய்யுமதி மாயைகளால்
தீராமைத் தீப்பிணியால்
மையலுறு மன்னவன் முன்
மற்றவரை வென்றருளில்
உய்யுமஎம துயிரும் அவன் உயிரும்
என உரைத்தார்கள்.''

''நீர்வெற்றி கொண்டால் உய்யும் எங்கள் உயிரும், மன்னன் உயிரும்'' என்று இருவரும் கூற பூம்புகலிவேந்தரும்

''ஒன்றும்நீர் அஞ்ச வேண்டா!
உணர்விலா அமணர் தம்மை
இன்றுநீர் உவகை எய்த
யாவரும் காண வாதில்
வென்றுமீ னவனை வெண்ணீறு
அணிவிப்பன் விதியால்''

என்று திருவருள் புரிகின்றார்.

''வெண்ணீறு அணிவிப்பன்'' என்று கூறியருளிடும் திருஞானசம்பந்தர் பாடிய ஒப்பற்ற திருப்பதிகம்தான் இரண்டாம் திருமுறைக்கண் அமைந்து விளங்கும் ''திருநீற்றுப் பதிகம்'' ஆகும்.

நீளிருள் நீங்க வந்த, கலைச் செழுந் திங்கள் போலும் திருஞான சம்பந்தர் வரக் கண்டு அவரைக் கையெடுத்து வணங்கித் தம் தலைப்பக்கம் இருந்த ஆசனத்தில் அமரவைக்கும் பாண்டிய மன்னன் ''இற்றைநாள் என்னை யுற்றபிணியைத் தெற்றெனத் தீர்த்தாரே வாதில் வென்றார்'' என்று கூறி, தம் இடப்பக்கமுற்ற வெப்பு நோயைச் சமணர்களும், வலப்பக்கமுற்ற வெப்புநோயை நம் திருஞான சம்பந்தரும் தீர்க்கவேண்டுமென வேண்டுகின்றான்.

பாண்டியனின் இடப்பாகத்து வெப்பு நோயைச் சமணர்கள் தீர்க்க எண்ணி மந்திரத்தைக் கூறி மயிற்பீலியைத் தடவுகிறார்கள். முன்போலவே மயிற்பீலி பிரம்பினோடு தீய்ந்து போகிறதே அன்றி நோய்ச் சிறிதும் தீரவில்லை.

பாண்டியன் திருஞானசம்பந்தரை ஏக்கமோடு பார்த்து ''சுவாமி! என் வெப்புநோய் தீரும்'' என்று பார்வையிலேயே வேண்டுகின்றான்.

''தென்னவன் நோக்கம் கண்டு
திருக்கழு மலத்தார் செல்வர்
அன்னவன் வலப்பால் வெப்பை
ஆலவாய் அண்ணல் நீறே
மன்னுமந் திரமுமாகி மருந்துமாய்த்
தீர்ப்ப தென்று
பன்னிய மறைகள் ஏத்திப்
பகர்திருப் பதிகம் பாடி''

(திருஞானசம்பந்தர் புராணம் 764)

''திருவளர் நீறு கொண்டு
திருக்கையால் தடவத் தென்னன்
பொருவரு வெப்பு நீங்கிப்
பொய்கையிற் குளிர்ந்த தப்பால்
மருவிய இடப்பால் மிக்க
அழலெழ மண்டு தீப்போல்
இருபுடை வெப்புங் கூடி
இடங்கொளா தென்னப் பொங்க''

(திருஞானசம்பந்தர் புராணம் 765)

திருநீற்றுப்பதிகத்தை ''வேதங்கள் எலாம் கொண்டாடும் அற்புதத் திருப்பதிகம்'' என்று நம் சேக்கிழார் பெருமான் போற்றுகின்றார்.

அத்தகைய மந்திரப் பதிகத்தை, மருந்துப் பதிகத்தை, மறைகள் ஏத்தும் மாமறைப் பதிகத்தைத் திருஞானசம்பந்தர் பாடிக் கொண்டே, திருவளர் திருநீற்றினைத் தம்திருக்கையால் பாண்டியனின் வலப்பக்க மேனியில் தடவ, கொடிய வெப்பு நோய் நீங்கிக் குளிர்ந்த பொய்கை போல் குளிர்ச்சியும் உண்டாகின்றது.

அதே நேரம் அமணர்கள் மயிற்பீலி தடவிய மன்னவன் இடப்பாகமோ, முன்பிருந்ததைவிட வெம்மை இருமடங்கு கூடி மன்னவனைச் சுட்டெரிக்கின்றது.

''திருஞானசம்பந்தர் திருக்கை தீண்டப்பெற்ற வலதுபாகத்தில் சொர்க்கம் காண்கின்றேன். சமணர்கள் தீண்டிய இடது பாகத்தில் நரகம் காண்கின்றேன். அமுது ஒரு பாகமும், நஞ்சொரு பாகமும் உணர்

கின்றேன். சமணர்களே! கொடியர்நீங்கள் எனை நீங்கி ஓடிப் போய்விடுங்கள். மறைக்குல வள்ளலாரே! இந்த வெப்பு நோய் முழுதும் நீக்கி என்னை ஆண்டு அருள்வீர்'' என்று பாண்டியன் திருஞானசம்பந்தரைக் கும்பிட்டு வேண்டிக் கொள்கின்றான்.

இதனை நம் சேக்கிழார் பெருமான்

''மன்னவன் மொழிவான்'' என்னே மதித்த
இக்காலம் ஒன்றில்
வெந்நரகு ஒருபால் ஆகும். வீட்டின்பம் ஒரு
பால் ஆகும்
துன்னுநஞ் சொருபால் ஆகும். சுவையமு
தொருபால் ஆகும்.
என்வடி வொன்றில் உற்றேன் இருதிறத்
தியல்பும்'' என்பான்.

(திருஞானசம்பந்தர் புராணம் 768)

''வெந்தொழில் அருகர் தோற்றீர்!
என்னைவிட்டு அகல நீங்கும்
வந்தெனை உய்யக் கொண்ட
மறைக்குல வள்ள லாரே!
இந்தவெப்பு அடைய நீங்க
எனக்கு அருள் புரிவீர் என்று
சிந்தையால் தொழுது சொன்னான்
செல்கதிக்கு அணியன் ஆனான்''

(திருஞானசம்பந்தர் புராணம் 769)

என்று பாடி விளக்கியிருக்கக் காண்கின்றோம்.

பெருமறைகள் போற்றுகின்ற திருநீற்றுப் பதிகத்தைப் பின்னும் ஒருமுறை காந்தாரப்பண்ணில் போற்றியே பாடி, நம் திருஞானசம்பந்தர் தம் திருக் கையால் திருவளர் நீறு கொண்டு மன்னவன் இடப் பாகம் முழுவதும் தடவ பாண்டியனின் வெப்பு நோய் முழுவதும் நீங்கி விடுகின்றது.

''திருமுகம் கருணை காட்டத்
திருக்கையால் நீறு காட்டிப்
பெருமறை துதிக்கும் ஆற்றால்
பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒரு முறை தடவ அங்கண்
ஒழிந்துவெப் பகன்று பாகம்
மருவுதீப் பிணியும் நீங்கி
வழுதியும் முழுதும் உய்ந்தான்''

(திருஞானசம்பந்தர் புராணம் 770)

''சைவ மைந்தர் சொல்லின்
வென்றிசந்த இன்சொல் மாலையால்
கைதவன் வெப்பொழிந்த
தன்மை கண்டு அறிந்தனம்''

என்று சேக்கிழார் திருநீற்றுப் பதிகத்தைச் ''சொல்லின் வென்றி சந்த இன்சொல் மாலை'' என்று மீண்டும் சிறப்பிக்கவும் காண்கின்றோம்.

திருஞானசம்பந்தர் தம் அவதாரச் சிறப்பைக் கூறவந்த நம் சேக்கிழார் பெருமான்

''தொண்டர் மனம் களிசிறப்பத்
தூய திருநீற்று நெறி
எண்திசையும் தனிநடப்ப''

என்று திருநீற்றுச் சிறப்பை எட்டுத் திசைகளும் உணருமாறு செய்ய திருஅவதாரம் புரிந்தார் என்று பாடி யிருப்பதற்கு ஏற்ப, பரசமயம் நிராகரித்து நீறாக்க அவருக்கு உறுதுணை புரிந்ததும் இத்திருநீற்றுப் பதிகமே என்பது நாம் உணரத்தக்கது.

''தென்னவன் தனக்கு நீறு
சிரபுரச் செல்வர் ஈந்தார்
முன்னவன் பணிந்து கொண்டு
முழுவதும் அணிந்து நின்றான்
மன்னன்நீ றணிந்தான் என்று
மற்றவன் மதுரை வாழ்வார்
துன்னி நின்றார்கள் எல்லாம்
தூயநீறணிந்து கொண்டார்''

(திருஞானசம்பந்தர் புராணம் 857)

''பூதி மெய்க்கணிந்து வேந்தன்
புனிதனாய் உய்ந்த போது
நீதியும் வேத நீதி
யாகியே நிகழ்ந்த தெங்கும்
மேதினி புனித மாக
வெண்ணீற்றின் விரிந்த சோதி
மாதிரம் தூய்மை செய்ய
அமணிருள் மாய்ந்த தன்றே''

(திருஞானசம்பந்தர் புராணம் 855)

என்று திருநீற்று விளைத்த அற்புதங்களைச் சேக்கிழார் பெருமான் பெரிதும் விவரித்துப் போற்றுகின்றார் எனில் அத்தகைய பெருமைகளுக்கு எல்லாம் காரண மாகிய சிறப்பினைக் கொண்டு விளங்குவது ''திரு நீற்றுப் பதிகமே'' ஆகும்.

''தென்னாட்டு அமண்மாச றுத்துத் திருநீறே
அந்நாடு போற்றுவித்தார்''

எனச் சேக்கிழார் பெருமான் கொண்டாடிப் போற்றும் நம் திருஞானசம்பந்தரின் திருநீற்றுப் பதிகத்தை நாளும் ஓதி நாம், தீரா உடல்நோயும், பிறவிநோயும் தீர்ந்து இன்புற்று மகிழ்வுறுவோமாக!

*(தொடரும்)*

# சிவ புராணம்

"திருமந்திரச் செம்மல்" திருமிகு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., (ஓய்வு)

*கரங்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க!*

அகத்தார்க்கு அண்மையிலும் புறத்தார்க்கு சேய்மையிலும் இருக்கின்ற எம்பெருமானின் மலர்ப் பாதங்களை வாழ்த்திய மணிவாசகப் பெருமான் இருகரம் குவிபவரின் உள்ளே ஆனந்தத்தைப் பொழிபவர் என்கின்றார். இரு கரங்கள் குவிக்கும் போது பண்பாடு வளர்கிறது. தன்னிலை விளக்கமும் ஆன்ம ஒடுக்கமும் உருவாகின்றது.

மணிவாசகர் குறிப்பிடும் கரங்குவிதல் இரு நிலைகளில் விளக்கப்படும்.

1. பண்பாட்டு நிலை
2. ஆன்ம ஒடுக்க நிலை

பண்பாட்டு நிலை சம்பிரதாயமாய் ஆணவத்தால் உந்தப்பட்ட வெளிப்பாடாக அமைந்த நிலை. 'சரியை' எனும் முதல் படியினை மேற்கொள்ளும் போது வழிப்பாட்டு ஒழுக்கங்கள் கடைபிடிக்கப்படுகின்றன. ஆனால் கரம் குவியும் போது 'தான்' எனும் ஆணவத்தை விடுத்து குவிக்க வேண்டும். ஆணவம் ஒடுங்கி கரம் குவியும் போது சஞ்சல நிலை மாறி உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி, இன்பம், அமைதி பிறக்கும். தெளிவு பெறலாம். எனவே கை குவிதவோடு மனமும் குவிந்தால் ஒழுக்கங்கள் நிலை பெறும். இதுவே ஆன்ம ஒடுக்க நிலை.


சரியை அனுட்டானமாக கோயிலுக்குள் செல்லும் போது தூபஸ்தம்பத்தையடுத்து பலிபீடம் இருக்கிறது. இப்பலிபீடத்தில் மனதை, மனதில் எழும் சிந்தனைகளைப் பலியிட வேண்டும். நிர்ச் சிந்தையுடன் உள்ளே செல்ல வேண்டும். இதைக் கடந்து சற்று உள்ளே சென்றால் நந்தியிருக்கும். நந்தி உயிர்த் தத்துவம். நந்தியை உயிர் என்று சொல்லும் போது மும்மலத்தால் கட்டப்பட்ட பசுத்துவத்தைக் குறிக்கும். பசு என்ற சொல்லே பாசத்தால் கட்டப்பட்ட உயிரைக் குறிக்கும்.

பாசக் கட்டுடன் சற்று மூலவரின் கர்ப்பக் கிரகத்திற்குச் செல்லும் போது சிறிய பலிபீடமும் சிறிய நந்தியும் காணப்படுகின்றது. இத்தகைய அமைப்பு பெரிய கோயில்களில் தான் உண்டு. சிறிய நந்தி ஆணவ மலம் மட்டுமேயுள்ள உயிர்த் தத்துவத்தைக் குறிக்கும். ஆணவ மலத்தோடு நின்ற உயிர் சிறிய பலி பீடத்தில் ஆணவத்தைப் பலியிட வேண்டும். பலியிட்டு கடந்தால் இறை தரிசனம் கிடைக்கும். சிறிய நந்தியை ஆத்மார்த்தமாகக் கடந்தால் தெளிவு பிறக்கும். இத்தெளிவே ஞானம். ஞானத்தோடு சிறிய நந்தியினிடத்தில் நின்று இறைவனின் கர்ப்பக்கிரகத்தை அடைய வேண்டும். அங்கு இறைவனைத் தரிசித்து விட்டு, ''இறைவா! தங்கவிடம் கேட்டுப் பெற வேண்டியது ஒன்றுமில்லை என்ற ஞானம் பிறந்து விட்டது'' என்று நொடிப் பொழுது நினைத்து அந்த ஞானத்தோடே கர்ப்பக் கிரகத்தை விட்டு வெளியேற வேண்டும். இதுவே கோயிலுக்குச் சென்று வழிபடும் முறையாகும்.

இவ்வாறு முறையாகக் கரம் குவிவதால் உடல், மற்றும் ஐந்து கருவிகளின் செயல்பாடுகள் ஒடுங்குகின்றன. அதனால் வரக்கூடிய அஞ்ஞானத்திற்கும் இடமில்லை. பாச ஞானத்தை விடுத்து இறை ஞானத்தைப் பெறும் நிலையே கரங்குவிதல்.

உலகை இயக்கக்கூடிய எம்பெருமான் அதை விரியவும் குவியவும் செய்கின்றான். விரிவது வியாபகமாவது. தன்னை வெளிப்பாடு செய்து கொள்ளுதல். அதனால் உண்டாய பலாபலன்களை அனுபவித்தல். அனுபவம் வாயிலாகப் படிப்பினைப் பெற்று பக்குவத்தை அடைதல். பக்குவத்தின் பயனாய் வினைப் பயன்களைத் தேய்த்துக் கொள்ளுதல் - இவ்வாறு உயிர்கள் வியாபகமடைகின்றன.

ஆனால் எம்பெருமாள் உயிருக்குள் உயிராகயிருந்து ஆட்டுவிக்கின்றான். உடல் கல்வியால் பெற்ற ஞானங்கள் உள்ளம் ஆன்ம ஒளி- இவற்றை யெல்லாம் சேர்த்து இறைவனுக்குச் சமர்ப்பித்து சிரத்தைத் தாழ்த்தி வணங்குவது 'சிரம் குவிவது'. பரிபக்குவ நிலையில் சேர்ந்து ஒன்றித்து 'நான் அற்று' நிற்கும் நிலை. தன்னைத் தானே அடக்கி, உணர்வுகளை உயர்த்தி, உணர்வுகளைப் படிப்படியாகக் கடந்து ஆழ் மனத்தில் சிந்திப்பது. எம்பெருமான் நம்மை விட்டு வெளியிலே போகாத அளவுக்கு அமைத்துக்



கொள்ளும் நிலை சிரங்குவிதல். ஆழ் மனதில் வருவது எல்லாம் அனுபவ நிலை. ஒரே காட்சியான இறை தரிசனம். இத்தரிசனம் நம்மை ஓங்குவிக்கும். நம்முடைய செயல்பாடுகளை உலகத்தோடு ஒன்றாமல் உணர்வினை புருவ மத்தியில் குவித்து ஓங்குவிக்கும் நிலையில் தூக்கிவைத்து வணங்குவது சிரங் குவித்தல். பிரம்மசகஸ்ரகாரத்திலுள்ள இறைவனைச் சேர்த்து இறையாற்றல் மேலே செல்லச் செல்ல சிரம் குவியும். பரம்பொருள் தான் எல்லாம் என்ற நிலையில் முழுமையான வட்டத்தில், 'நான்' என்ற நிலையில் சிரத்தைக் குவிப்பது. இந்நிலையில் பூரணம் என்ற ஒன்றில் பார்த்துப் பார்த்துத் திளைக் கின்றோம். இந்நிலையில் உள்ளம் புகுந்து வளர்விக்கும் வியாபகமான முழுமையான நிலையிலே எல்லா வுயிர்களிடத்தும் உயிருக்கு உயிரான இறைவனைத் தரிசிக்கும் துவாதசாந்த வெளியின் பரவெளியின் சந்திப்பே சிரங்குவிதல். சிரங்குவித்த நிலையில் உயிர் ஓங்குவிக்கப்பட்டு கண் குளிர ஆனந்திக்கின்றது.

இத்தகு ஆனந்தமயமான எம்பெருமான் சகல உண்மையின் சௌபாக்கிய செல்வங்களுக்குரிய சீரோன். அவனும் நானும் இரண்டில்லை என்று ஒன்றுபட்டால் உள்ளத்திலே ஆனந்தத்தை நல்கும் - ஓங்குவிக்கும் எம்பெருமானின் திருவடிகளை வாழ்த்தி 'சீரோன் கழல் வாழ்க' என்று வாழ்த்தி வழிபடுகிறார் மணிவாசகப் பெருமான்.

***

# ஆன்மீகம்

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப (ஓய்வு)
உறுப்பினர் - செயலாளர், வரிசீரமைப்பு மற்றும் வருவாய் மேம்பாட்டுக்குழு, தமிழக அரசு

(முன் தொடர்ச்சி)

★. பணக் கஷ்டம் நீங்கிவிட்டால் ஆன்மீகத்தில் ஈடுபடலாம் என்று நினைப்பது உண்மையில் உல்லாசமாக வாழ விரும்புவதற்கு ஒப்பான தாகும்.

★. ஒரு மணிநேரம் ஆகும் என்று தெரிந்திருந்தாலும் ஐந்து நிமிடத்தில் வந்து விடுவேன் என்று சொல்வது எப்படி பொய்யில்லையோ அது போன்று நினைத்தால் முக்தி, பிறந்தால் முக்தி, இறந்தால் முக்தி என்று சொல்லப்பட்டுள்ளது.

★. நல்லவன் செய்யாததை நாள் செய்யும் என்பது உண்மையானாலும் முயற்சி மேற்கொள்வதில் தொய்வு ஏற்படக்கூடாது.

★ தவறு செய்கின்ற அனைவருக்கும் இறையுணர்வு கிடையாது என்று சொல்லிவிட முடியாது. இறையுணர்வு இருந்து தவறு செய்பவர்கள் விரைவில் தங்களைத் திருத்திக் கொள்வார்கள்.

★ முக்திப்பேறு, எடுத்த பிறவியின் எண்ணிக்கையைப் பொருத்துக் கிடைப்பதல்ல. ஆன்மாவின் பக்குவத்தைப் பொருத்தே கிடைக்கிறது.

★ கெட்ட எண்ணங்கள் செயல்வடிவம் எடுக்கு முன்பே விழித்துக் கொண்டு இறைவன் மீது அன்பு செலுத்தினால் தனக்கு வரப்போகும் பெரிய ஆபத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளலாம்.

★ அனுபவம் காலத்தைப் பொருத்ததல்ல. இறையருள் இருந்தால் ஐம்பது ஆண்டுகளில் பெற முடிகிற அனுபவத்தை ஐந்து நாளில் பெற்று விடலாம்.

★ பறவைகளோ விலங்குகளோ சிறிது காலமே தங்களுடைய சந்ததிகளைப் பாதுகாத்து வளர்த்துப் பிறகு பிரிந்து விடுகின்றன. மனிதன் மட்டும் தான் பாசம் என்ற பெயரில் கடைசி வரையில் அல்லல் படுகிறான்.

★ ஆத்மப் பரிசோதனையில் பிள்ளைகள் ஈடுபட்டால் பெற்றோர்கள் விபரீதம் நடந்து விடுமோ என்று பயந்து விடுகிறார்கள். பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்து வந்தார்களேயானால் பயப்படத் தேவையில்லை.

★ நியாயமான முறையில் பொருள் சம்பாதிப்பதும் அதே சமயத்தில் அருளைச் சம்பாதிப்பதும் ஒன்றுக்கொன்று முரணானதல்ல.

★ துஷ்டர்களைக் கண்டால் தூர விலக வேண்டும். வீட்டிலுள்ள துஷ்டர்களைக் கண்டால் சகித்துக் கொண்டு ஆன்ம பலத்தினால் திருத்த முயற்சி செய்ய வேண்டும்.

★ விலை மதிக்க முடியாத 'ஒரு பொருள்' 'பெரும் பொருள்' முக்தி. விலைபோகாத பொருளும் முக்தியே.


★ சித்தர்கள் பாடிய பாடல்கள் உயிர்நோயைப் போக்க வல்ல தேனில் குழைக்காத கசப்பு மருந்தாக உள்ளது.

★ உடனடியாக உடல் நோயைப் போக்க வல்ல மருந்தினைத் தேடி அலையும் மனிதன், தேடாமல் கிடைக்கும் உயிர் நோயைப்போக்க வல்ல மருந்தினைப் பயன்படுத்துவதில்லை.

★ மனித சஞ்சாரம் இல்லாத இடத்திற்குச் சென்றால் மனச்சஞ்சலம் தீர்ந்துவிடும் என்றோ மனதை ஒருமுகப்படுத்திவிடலாம் என்றோ சொல்ல முடியாது. இயற்கையின் வனப்புகூட ஒருவித பந்தத்தை ஏற்படுத்திவிடும்.

★ இறையுணர்வு துன்பத்தைத் தாங்குகின்ற கேடயமாகும். பின்னால் துன்பம் வராமல் தடுப்பதற்கான தடுப்பு மருந்தாகவும் பயன்படுகிறது.

★ மயானம் செல்லும் வரை தியானம் செய்தாலும் மனிதன் இயல்பாக இருக்கும் நேரத்தில் இறைவனுடன் ஐக்கியமாகும் எண்ணம் இல்லாமலிருந்



தால் தியானம் வெறும் உடற்பயிற்சியாகவே அமையும்.

★ தனிமனிதனைப் புகழ்பாடிப் பெறுகின்ற பயனை விட இறைவனைப் புகழ் பாடினால் எண்ணற்ற பயன் கிடைக்கும். இம்மைப் பயனும் மறுமைப் பயனும் கிடைக்கும்.

★ பறவைகள் பறப்பதென்பது சாதாரணம். மனிதன் பறந்தால் சாகசம். இறைவனை அடைவதற்கு எந்த சாகத்திலும் ஈடுபட வேண்டியதில்லை. ஆத்ம சாதகம் ஒன்றே போதும்.

★ பழகப் பழகப் பாலும் புளிக்கும். பாழும் உலக வாழ்க்கை என்று புளிக்குமோ என்ற எண்ணம் ஏற்படுவது? ஆன்ம வளர்ச்சிக்கு வித்தாகும்.

★ பட்டம், பதவி, பாராட்டு ஆகியவைகள் ஒருவனுடைய ஆன்ம வளர்ச்சியின் வேகத்தைக் குறைக்கும்.

22. சிற்றின்பம் என்ற சொல் தவறான செயலுக்கு அடையாளமான சொல் என்று கருதப்படுகிறது. இது தவறான கருத்தாகும். ஒழுக்கமான குடும்ப வாழ்க்கை வாழ்வதில் தவறேதும் இல்லை. இறைவன் திருவடியில் இணைவது பேரின்பமாகும். இது ஈடு இணையற்றது. அதனால் மற்ற அனைத்து இன்பங்களும் சிற்றின்பமாகச் சொல்லப்படுகிறது.

★ கருவுற்ற பெண் எப்படி சில நாட்களில் தான் தாயாகப் போகிறோம் என்று அறிந்து கொள்வாளோ அது போன்று இறைவன் மீது உண்மையான அன்பு செலுத்தி வருகிறவனுக்கு உணர்வு பூர்வமாகவும் அனுபவ பூர்வமாகவும் தான் ஆன்ம வளர்ச்சி அடைந்து வருவது தெரிந்து விடும்.

★ இறந்தவர்கள் என்ன கதி அடைந்தார்கள் என்று தெரியாவிட்டாலும் சம்பந்தப்பட்டவர்கள் இறந்தவர்கள் சிவலோக பதவி அடைந்து விட்டார்கள் என்று தெரிவிக்கிறார்கள். இதிலிருந்து மனிதர்கள் அறிந்தோ அறியாமலோ புருஷார்த்தம் (அடைய வேண்டி பொருள்) என்னவென்று தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதை அடைவதற்கான ஆர்வத்தை மட்டும் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

★ தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம் ஆகியவைகளை உறுதுணையாகக் கொள்ளாமல் தாயத்தையும் தகடையும் நம்புவது பயனளிக்காது.

★ பசியில்லை என்று கூறிப் பசி எடுப்பதற்காக வைத்தியரிடம் சென்று மருந்து வாங்கி வருவார்கள். ஆன்ம தாகம் ஒருவனுக்கு ஏற்படவில்லையென்றால் உடனே ஒன்றும் செய்து விட முடியாது. என்றாவது ஒருநாள் ஆன்ம தாகம் ஏற்பட்டுவிடும்.

★★★

# தசகண்ட இராவணன்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

(ஆணவம் அழிவைத் தரும் என்பதை உணர்த்தும் நீதிக்கதை)

வானுலகில் வசித்து வந்த ராட்சசர்களின் மன்னன் சுமலி, தன் மகள் கைகேசியுடன் மண மகன் தேடி அலைந்து கொண்டிருந்தான்.

ஒரு முறை சுமலி தனது அழகான மகள் கைகேசியுடன் பூமிக்கு வந்தான். அவன் தன் மகளிடம், ''நீ இந்த உலகில் சிறந்த மனிதனை திருமணம் செய்து கொண்டு பல பலசாலி மகன் களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.'' என்றான்.

சுமலியும் சரியான நபரைத் தேர்ந்தெடுக்க ஊர் ஊராகச் சென்றான். ஆனால், ஒருவர் கூட சரி யான நபராக இல்லையே என்று தேடலானான்.

ஒரு நாள் விச்ரவ முனிவரின் ஆசிரமத்துக்கு அருகில் மிகவும் அழகான, கம்பீரமான தோற்றங் கொண்ட இளைஞன் வானத்திலிருந்து புஷ்பக விமானத்துடன் கீழே இறங்கினான்.

சுமலி மன்னன், தன்மகளிடம் ''இவனைப் போன்ற மக்களைப் பெறுவதற்கு நீ விச்ரவ முனிவரை மணக்க வேண்டும். இந்த இளைஞன் விச்ரவனின் மகன் குபேரன் தான்; அவனைப் பார்த்தால் பலசாலி யாகவும் பணக்காரனாகவும் தெரிகிறான்.'' என்று மகளிடம் கூறினான்.

பின்னர் சுமலி, தன் மகளுடன் தன் நாட்டிற்குச் சென்றான். ஆனால், குபேரனை அவனால் மறக்க முடியவில்லை. ''மகளே கைகேசி! உனது அழகா லும், புத்திகூர்மையாலும் முனிவரின் அன்பைப் பெறு; நீ அவரைச் சம்மதிக்கவைத்து, திருமணம் செய்து கொண்டு, குபேரனைப் போல பலசாலி மகன்களை நீயும் பெற்றுக் கொள்ளலாம்! நல் வாழ்வும் பெறலாம்'', என்று கூறி மகளை அனுப்பி வைத்தார்.

அதன்படி கைகேசி விச்வர முனிவரின் ஆசரமத்துக்குச் சென்றாள்.

சூரியன் அஸ்தமிக்கும் அந்தி வேளையில் ஜபம் செய்து கொண்டிருந்த விச்ரவ முனிவரிடம் சென்று கைகேசி, ''முனி புங்கவ! முக்காலமும் அறிந்த உங்களை கணவனாக அடைய விரும்புகிறேன்'', என்று பணிவுடன் கூறினாள். கைகேசியின் அழகிலும் சாந்த குணமும் கண்டு மனதைப் பறி கொடுத்தாலும் அவளைப் பார்த்து, ''ஓ! அழகான பெண்ணே! யார் நீ. இங்கு வந்தாய்'', என்று கேட்டார். அதற்கு கேகசி யும், ''முனிவரே! என் பெயர் கைகேசி! நீங்கள் ஒரு பெரும் முனிவர், நான் ஏன் இங்கு வந்தேன் என உங்களுக்குத் தெரியும்,'' என்றாள். விச்ரவ முனிவரும், ''பெண்ணே! நான் புரிந்து கொண்டேன்; ஆனால் நீ தவறான நேரத்தில் வந்திருக்கிறாய்; இனி நமக்குப் பிறக்கும் குழந்தைகள் ராட்சசர்களாகத்தான் இருப் பார்கள்!'' என்றார். அதற்கு அவளும், 'அப்படியா' என்றாள்.

பின்னர் கைகேசியைத் திருமணம் செய்து கொண்டார் விச்ரவ முனிவர் சில ஆண்டுகளில் இருவருக்கும் ராவணன், கும்பகர்ணன், சூர்ப்பனகை என முதல் மூன்று குழந்தைகளும் பிறந்து அவை அசுர வடிவம் கொண்டதைக்கண்டு பயந்து, ''சுவாமி! நீங்கள் சொன்னதைக் கேட்காமல் இப்படி அசுரர்களுக்குத் தாயாகிவிட்டேன்; தயவு செய்து ஒரு நல்ல மகவுக்குத் தாயாக அருள வேண்டும்,'' என்று மனம் வருந்தி கேட்டாள்.

விச்வர முனிவரும், ''கைகேசி! நான்காவதாகப் பிறக்கப்போகும் உன் மகன் அசுரக் குலத்தோர்க்கு நற்பெயர் ஈட்டிடுவான்'', என்று கூறினார். அப்படிப் பிறந்த நான்காவது மகன் தான் விபீஷணன் ஆவார்.

பல ஆண்டுகள் கழிந்தன. ராவணனும், கும்பகர்ணனும் முரடர்களாக வளர்ந்தனர்.

ஒரு நாள் தன் தந்தையைச் சந்திக்கவந்தான் குபேரன்.

கைகேசி, குபேரன் சென்றவுடன், ''மகனே! ராவணா, குபேரனைப் பார். இலங்கையின் அரசனாக இருக்கிறான்; பலசாலியாக, செல்வந்தனாக இருக் கிறான். நீ அவனைப் போல இருக்க வேண்டும் என்பதே என் நெடு நாளைய ஆசை; அதை நிறை வேற்றுவாயா? மகனே'', என்றாள்.

அதற்கு ராவணனும், ''அம்மா! நான் குபேரனை மிஞ்சி விடுகிறேன். அதற்கு இப்போதே சபதம் எடுத்துக் கொள்கிறேன்'', என்று கூறினான்.

மூன்று மகன்களும் பிரம்மாவை நோக்கித் தவம் புரிந்தனர். ஆனால் பிரம்மா வராததால் இராவணன் தன் தலையைக் கொய்து நெருப்பு ஜ்வாலையில் போட்டான். ஆனால் தலை மறுபடியும் நெருப்பு ஜ்வாலையில் இருந்து அவன் உடலில் ஒட்டிக் கொண்டது சேதமில்லாமல்! ஆனால் அவனோ மறுபடியும் கொய்து போட்டான். இதே போல் பத்து முறை நடந்தபின் பிரம்மதேவர் தோன்றி, ''ராவணனே! உன் தவத்தால் மகிழ்ச்சி அடைந்தேன்! என்ன வரம் வேண்டும்? கேள் தருகிறேன்'', என்றார். இராவணனும் அவரைக் கண்டு வணங்கினான். அதற்கு இராவணன், ''பிரம்மதேவரே! எனக்கு சாகா வரம் கொடுங்கள்'', என்றான். அதற்கு பிரம்மதேவரும் ''உனக்கு மட்டு மல்ல' பூமியில் பிறந்த உயிரினங்கள் ஆகட்டும், மும்மூர்த்திகள், தேவாதி தேவர்கள் ஆகட்டும், சாகா வரம் கிடையாது. ஆரம்பம் ஒன்று இருந்தால், முடிவும் அன்றே எழுதப்பட்டுவிடுகிறது; அதனால் வேறு ஏதாவது கேள்,'' என்றார். ராவணனும் ''அப்படி யானால், நான் கடவுள் கையாலோ, தேவர்கள் கையாலோ, ராட்சசர்களாலோ, ஆவிகளாலோ மரண மடையக் கூடாது'' என்றான். அதற்கு பிரம்ம தேவரும் ''அப்படியே ஆகட்டும். மேலும் உனக்குச் சில வரங்களைத் தருகிறேன். உன் தலைகளை நீபத்து முறை கொய்து நெருப்பில் போட்டதால், அவை உனக்குக் கிடைக்கும்; தசகண்ட ராவணன் என்னும் பெயரும், நீ விரும்பும் போது தலைகளை மாற்றிக் கொள்ளலாம் என்ற வரமும் அளித்தேன்'', என்றார்.

கும்பகர்ணனோ பலம் மிக்கவன், தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பிரம்மதேவர் தம் பத்தினியான சரஸ்வதியை அவன் வாக்கில் தங்கி, வரத்தை மாற்றிக் கூறும் படி செய்தார். நித்தியனாய் இருத்தல் வேண்டும் என்று கேட்பதற்கு நினைத்து ''நித்திரையனாய் இருத்தல் வேண்டும்'' எனக் கேட்டு விட்டான். அதன்படி கும்பகர்ணனும் ''சதா தூங்கிக்கொண்டே இருக்க வேண்டும்'' என்ற வரத்தைப் பெற்றான். விபீஷணனோ, ''நான் எப்பொழுதும் நேர்மையாக இருந்து, அதன் படி என் வாழ்க்கைச் செல்ல வேண்டும்'', என்றான். பிரம்மாவும் வரங்களை அளித்துவிட்டு பிரம்மலோகம் சென்றார்.

இம்மூவரும் தம் பெற்றோர்களைக் காணச் சென்றனர். வழியில் தாத்தா சுமலி இவர்களைச் சந்தித்தான்; ''உடனே இலங்கையைக் கைப்பற்று, அது நமக்குத் தான் சொந்தம்'' என்றான்!

சுமலியின் ஆசை வார்த்தைகளில் மயங்கிய ராவணன், இலங்கையை நோக்கிப் புறப்பட்டான். உடனே விபீஷணன், ''அண்ணா! நீ செய்வது சரியல்ல என்றான். அதற்கு இராவணன் ''வாய் மூடு விபீஷணா! உன்னிடம் யார் யோசனை கேட்டது?'', என்று கோபமாக பதில் உரைத்தான்.

திரிகூட மலைக் காட்டில் முகாமிட்டான் ராவணன். இலங்கையில் உள்ள குபேரன் அரண்மனைக்கு தூதுவன் ஒருவனை அனுப்பினான் ராவணன்! அவனிடம், ''நான் இலங்கையை ஆட்சி செய்ய விரும்புகிறேன்; உடனே இலங்கையை விட்டு வெளியேறுமாறு குபேரனிடம் சொல்,'' என்று சொல்லியனுப்பினான்.

குபேரனின் அரண்மனையில் தூதுவன் கூற விவரம் அறிந்து, குபேரன், ''எனக்குச் சொந்தமானது அவனுக்கும் சொந்தமானதுதான். ஏன் அவன் என்னை இலங்கையை விட்டு வெளியேறச் சொல்கிறான்! நான் என் தந்தையிடம் பேசிவிட்டுச் சொல்கிறேன் என ராவணனிடம் சொல்,'' என்று சொல்லி அனுப்பினான்.

தந்தை விச்ரவ முனிவரைச் சந்தித்தான். விவரமறிந்த விச்ரவ முனிவர், குபேரனிடம், ''பிரம்மனின் வரம் ராவணனை மேலும் முரடனாக்கி விட்டது'' என்றார். குபேரனும், ''தந்தையே நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்'', என்றான். முனிவரும், ''அவனிடம் இலங்கையை விட்டு விட்டு நீ கைலாச மலைக்குச் செல்; அங்கு உனக்கு எல்லா நலனும் கிடைக்கும்'', என்றார்.

ராவணனின் உத்தரவுப்படி இலங்கையை விட்டு வெளியேறினான் குபேரன். தனது வீரர்களுடன் இலங்கைக்குள் நுழைந்த ராவணன் இலங்கையின் அரசனானான்.

நாட்கள் நகர்ந்தன. ராவணனின் அட்டூழியம் அதிகரித்தது. கடவுள்களையும், முனிவர்களையும், தேவர்களையும் துன்புறுத்தத் துவங்கினான்.

இச்செய்தி குபேரனுக்கு எட்டியது. குபேரன், 'ராவணனின் செயல் மிகவும் மோசமானதாக' உள்ளது. என் தம்பியைத் திருத்துவது எனது கடமை என எண்ணி இலங்கைக்கு ஒரு தூதுவனை அனுப்பினான்.

குபேரன் அனுப்பிய தூதுவன், இராவணனிடம், ''முனிவர்களைத் துன்புறுத்துவதும், அப்பாவி மக்களைக் கொலை செய்வதும், விஷ்வரனின்

வாரிசுக்கு அழகல்ல; நீங்கள் உங்கள் வழியை மாற்றிக் கொள்ள வேண்டும் என என் மன்னர் உங்களிடம் சொல்லச் சொன்னார்'', என்றான் தூதுவன்.

உடனே இராவணன் அத்தூதுவனை வெட்டி வீழ்த்தினான். குபேரனுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று சொல்லி, தனது தேரில் ஏறிய ராவணன் பெரும் படையுடன் கைலாசத்தை நோக்கிச் சென்றான்.

இராவணன், குபேரன் படைகளுக்கு இடையே பயங்கர சண்டை நடந்தது. பிரம்மனிடம் இருந்து பெற்றிருந்த வரத்தால் இராவணனை எந்த ஆயுதமும் காயப்படுத்தவில்லை. கடைசியாக குபேரன் தோற்றான்.

சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்த தேவர்கள் குபேரனை ரதத்தில் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

குபேரனின் புஷ்பக விமானத்தைக் கைப்பற்றினான் இராவணன். அவன் கைலாச மலையைத் தாண்டிச் செல்ல முயன்றான்.

திடீரென புஷ்பக விமானம் அசையாமல் நின்றது? புஷ்பக விமானம் ஏன் நின்று விட்டது என இராவணன் யோசித்துக் கொண்டிருக்கும் போது, சிவ பெருமானின் அன்பிற்குரிய 'நந்தி' அங்கே வந்தார்! ''ராவணா! இது சிவபெருமானின் இருப்பிடம், இங்கே குழப்பம் செய்யாதே!'' என்று சொன்னார்.

இராவணன், ''இது என்ன சிவனின் உத்தரவா? சிவன் வசிக்கும் இந்த மலையை அப்படியே கவிழ்க்கிறேன் பார்,'' என்றான், ஆணவத்துடன், ஆவேசமாய் தன் பத்து தலைகளுடன் தூக்கினான். தேவர்கள் மற்றும் பார்வதி தேவியும் கூட பயந்து விட்டார்கள்.

ஈசனும், பார்வதியிடம், ''இது விச்ரவ முனிவரின் மனைவி கைகேசியின் மகன் ஆன தசானன் வேலையாகத் தான் இருக்கும்; சற்றுப்பொறு'' என்று கூறிவிட்டு ஈசன் தனது கால் கட்டை விரலால் மலையை லேசாக அழுத்தவும், மலையானது கீழே அழுந்த ஆரம்பித்தது; தசானனால் மலையின் பளுவைத் தாங்க முடியவில்லை. அவ்வழியே வந்த நாரத முனிவர், ''தசானனா! சிவ பெருமானின் கோபத்திற்கு ஆளாகாமல் அவரைத் துதி பாடி நல்ல வரங்கள் பல பெறலாமே,'' என்று கூறினார்.

தசானன் சிவபெருமான் மீது அருமையான தோத்திரப் பாடல்கள் பாடினான். அதனால் மன மகிழ்ந்து சிவபெருமான், தசானனன் முன் தோன்றி, ''தசானனா! மனதிற்கினிய 'இராதம்' செய்ததால், இனி நீ 'இராவணன் என்று அழைக்கப்படுவாய். உன் பாடல்கள் 'இராவிதம்' என்று பெயர் பெறும். மேலும் உனது பராக்கிரமத்தை மெச்சி 'சந்திரஹாசம்' என்ற வாளை உனக்கு அளிக்கிறேன்'', என்று வரமளித்தார்.

அயோத்தியை தசரத மன்னன் ஆட்சி செய்து வந்தார். அப்போது அயோத்திக்கு அருகிலுள்ள கோசலதேசத்தை 'கோசலம்' என்ற மாநகரைத் தலைநகராகக் கொண்டு கோசல ராஜன் ஆண்டு வந்தான். அந்த மன்னனின் திருமகள் கௌசல்யை; சிறந்த குணவதியாகத் திகழ்ந்தாள். கோசலராஜன் தன் மகள் கௌசல்யையை அயோத்தி மன்னனுக்கு மணம் முடிக்க எண்ணி, அதற்கான தகுந்த ஏற்பாடுகள் செய்து, திருமணத்திற்கான ஏற்பாடுகளில் முனைந்திருந்தான்.

இலங்கையை ஆண்டு வந்த இராவணன் தன்து விருப்பப்படி தேவர்களையும் ஆட்டிப்படைப்பவனாக இருந்தான். தேவர்கள் அவனுக்கு அஞ்சி வாழ்ந்தது மட்டுமல்லாமல், மும்மூர்த்திகளாலும், தேவர்களாலும் தனக்கு மரணம் ஏற்படக்கூடாது என்ற வரத்தைப் பெற்றிருந்தான்.

பிரம்ம தேவனை இலங்கைக்கு வரவழைத்து, ''பிரம்மதேவனே! பிறந்தவர் எவராயினும் ஒரு நாள் இறந்துதான் ஆக வேண்டும் என்று சொல்லப்படுகிறது! அப்படியானால் எனக்கும் மரணம் ஏற்படுமானால், அது யாரால் ஏற்படும்? இதை நீ மூடி மறைக்காமல் உள்ளபடியே சொல்ல வேண்டும்.'' என்று இறுமாப்புடன் கேட்டான்.?

பிரம்மதேவரும், ''ராவணனே! இப்போது அயோத்தியை அரசாளும் தசரத மன்னனுக்கும், கோசலராஜன் மகள் கௌசல்யைக்கும் இன்றைக்கு ஐந்தாம் நாள், சிறந்த அந்தணர்களைக் கொண்டு திருமணம் செய்வதாக நிச்சயித்திருக்கிறார். தசரத மன்னனுக்குச் சாட்சாத் ஆதி நாராயணனே, 'ராமன், லட்சுமணன், பரதன், சத்ருக்னன் என்ற பெயர்களில் மகன்களாக அவதரிப்பார். தசரதனுக்கும் கௌசல்யைக்கும் பிறக்கப்போகும் ஸ்ரீராமபிரானால் உனக்கு மரணம் ஏற்படுமென்று நீ பிறந்த அன்றைய தினமே உன் தலையில் எழுதப்பட்டுவிட்டது. அனைவருக்கும் நேரும் மரணம் உனக்கும் ஒரு நாள் நேரத்தான் போகிறது. முட்டாளே! உன் பராக்கிரமம் எதுவும் நிச்சயமாக உன்னை மரணத்திலிருந்து காப்பாற்றப்

போவதில்லை என்பதை தெரிந்து கொள்,'' என்று சொல்லிவிட்டு அவர் தமது சத்தியலோகத்திற்குத் திரும்பிச் சென்றுவிட்டார்.

பிரம்ம தேவர் சென்ற பிறகு இராவணன், 'விதியை மதியால் வெல்ல வேண்டும். அதற்கு என்ன வழி' என்று சற்று யோசனையில் ஆழ்ந்தான் 'அத்தைக்கு மீசை முளைத்தால்தானே சித்தப்பா ஆக முடியும்? தசரதனுக்கும் கோசலைக்கும் திருமணம் நடந்தால் தானே. திருமால் அவர்களுக்கு மகனாகப் பிறக்க முடியும்; அவர்களை இப்போதே கொன்று விடுகிறேன்', என்று எண்ணியவன் அரக்கர் களை அழைத்துக் கொண்டு, புஷ்பக விமானத்தில் ஏறி அயோத்திக்குப் புறப்பட்டான்.

அயோத்தியில் தசரதன், தன் அமைச்சர் சுமந்திரருடன், மற்றும் சிலருடன் சரயூநதியில் 'ஜலக் கிரீடை செய்து கொண்டிருந்தார். ராவணன் தசரதரையும் அவரது படகையும் தூள்தூளாக்கிவிட்டு, அனை வரும் நீரில் மூழ்கியபின், நேராக கோசல் தேசத்தரசன் கோசல ராஜனுடன் சண்டையிட்டு அவரைத் தோற்கடித்து, கௌசல்யையைக் கைப்பற்றி அவளை ஆகாயமார்க்கமாக இலங்கைக்கு எடுத்துச் சென்றான். பின் ஒரு தீவில் இறங்கி, ஒரு பெட்டியில் அவளை அடைத்து, ஒரு அரக்கனை திமிங்கிலமாக காவலுக்கு நியமித்து, ''நான் கேட்கும் போது நீ இந்தப் பெட்டியை என்னிடம் ஒப்படைக்க வேண்டும்'', என்று கட்டளை பிறப்பித்து விட்டு இலங்கைக்குச் சென்றான் இராவணன்.

அரக்கனாகிய திமிங்கிலம், ராவணன் தந்த பெட்டியைத்தன் வாயில் கவ்விக் கொண்டு சமுத்திரத் தில், அங்கும் இங்குமாக சஞ்சரித்துக் கொண் டிருந்தது.

சரயூநதியில் தசரதனின் உல்லாசப்படகு இராவணனால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட தால், அதில் இருந்தவர்கள் அனைவரும் நதியில் மூழ்கினர். தெய்வச் செயலாக தசரதரும் அவரது அமைச்சர் சுமந்திரரும் மட்டும் தண்ணீருக்கு மேலே வந்து உடைந்த படகின் ஒரு கட்டையைப் பிடித்துக் கொண்டு அதில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். சரயூ நதியின் பிரவாகம் அவர்களைக் கங்கையில் கொண்டு போய் சேர்த்தது. கங்கைநதியின் பிரவாகம் அவர் களைக் கடலில் கொண்டு போய்ச் சேர்த்தது. அந்த நிலையில் கட்டையின் மீது அமர்ந்திருந்த அவர் களைச் சமுத்திர வெள்ளம், கோசலையை, ராவணன் அடைத்து வைத்திருந்த தீவுக்குக் கொண்டு போய் சேர்த்தது.

அதற்குள் அரக்கனான திமிங்கிலத்தை, உண்மையான திமிங்கிலம் ஒன்று எதிர்த்தது. தன் வாயில் வைத்திருந்த பெட்டியைத் தீவின் கரையில் வைத்து விட்டு, இத்திமிங்கிலம், உண்மையான திமிங்கிலத்திடம் சென்று உக்கிரமாகப் போரில் ஈடு பட்டது. இச்சமயம் தசரதரும், அமைச்சரும் அந்தத் தீவை அடைந்ததில், தீவில் பெட்டி மட்டும் கேட்பாரற்றுக் கரையில் இருப்பதைக் கண்ட அவர்கள், அதைத் திறந்து பார்த்தார்கள். அந்தப் பெட்டிக்குள் கோசலையைக் கண்டு தசரதரும், சுமந்திரரும் பெரிதும் வியப்படைந் தார்கள். கோசலை, ராவணன் தன்னைச் சிறைப் பிடித்து வந்ததைப் பற்றி தசரதரிடம் விவர மாக தெரிவித்தாள். தசரதரும் தாம் அந்தத் தீவுக்கு வர நேர்ந்த விதத்தைக் கோசலையிடம் தெரிவித்தார்.

பிறகு தசரதர், கோசலையை 'காந்தர்வ' முறைப் படி அந்தத் தீவிலேயே திருமணம் செய்து கொண்டார். அவ்விதம் கோசலையும் தசரதரும் திருமணம் செய்து கொண்ட நேரம், ஏற்கனவே அவர்களின் திருமணத் திற்கு என்று நிச்சயிக்கப்பட்டிருந்த அதே சுபமுகூர்த்த வேளையாகவே இருந்தது. மூவரும் அப்பெட்டிக் குள் புகுந்து பெட்டியை மூடிக்கொண்டார்கள். அரக்க திமிங்கிலம் உண்மையான திமிங்கிலத்திடம் சண்டையில் வெற்றிபெற்று கரையில் இருந்த பெட்டியை மறுபடியும் வாயில் கவ்விக் கொண்டு நீரில் அங்குமிங்குமாக சஞ்சரிக்க ஆரம்பித்தது.

இராவணன் இலங்கைக்குத் திரும்பிய பின் சில நாட்கள் சென்றன. அவன் ஒரு நாள் பிரம்மதேவரை தன் அரசவைக்கு வரவழைத்து சபையோர் முன், பிரம்மதேவரிடம் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறி, ''தசரதன் நீரில் மூழ்கி இறந்து விட்டான். கோசலையை பெட்டியில் அடைத்தேன். பட்டினியில் அவளும் இறந்துவிட்டாள்'' என்று கூறலானான்.

பிரம்ம தேவரோ புன்முறுவலுடன், விதியை வென்று விட்டதாக மனப்பால் குடிக்காதே! இறைவ னிடம் சரண் புகுந்து பக்தி செலுத்துவதனால் விதியை மாற்ற முடியுமே தவிர, உனக்கு இருப் பதைப் போன்ற அகங்கார புத்தியைக் கொண்டு எவராலும் விதியை மாற்ற முடியாது. நீ கொன்று விட்டதாகக் குறிப்பிடும் தசரதன் கோசலையைத் திருமணம் செய்து கொண்டு அவளுடனேயே இருந்து வருகிறான்'', என்று கூறினார்.

இராவணன் உடனே தூதுவர்களை அனுப்பி உடனடியாகத் தீவுக்குச் சென்று பெட்டியை எடுத்து வரும்படி ஆணையிட்டான். அவர்களும் சென்று பெட்டியை எடுத்து வந்து ராவணனிடம் சேர்ப் பித்தனர்.

இராவணன் ''பிரம்மனே! இதோ கோசலை யின் சடலத்தை நீயே உன் கண்ணால் பார்'' என்று முழங்கிவிட்டுத்தானே அப்பெட்டியை பிரம்மாவின் முன்னால் திறந்தான்.

திறக்கப்பட்ட பெட்டியிலிருந்து, 'தசரதர், கௌசல்யை, சுமந்திரர் ஆகிய மூவரும் வெளியே வந்தனர். பெட்டிக்குள் அவர்களைச் சற்றும் எதிர் பாராத இராவணன், வியப்படைந்தான்...! மறு விநாடியே, அவன் வியப்பு கோபமாக மாறியது. அவர்களைக் கொன்று விடுவது என்ற நோக்கத் துடன் ஒரு பெரிய கத்தியைக் கையில் எடுத்தான்.

அப்போது பிரம்மதேவர்! ஏ... ராவணா! முட்டாள்தனமாக என்ன காரியம் செய்கிறாய்? உன்னால் இவர்களைக் கொல்ல முடியாது. வரப் போகும் மரணத்தை முட்டாள்தனமாக இப்போதே நீயாக வரவழைத்துக் கொள்ளாமல், புத்திசாலித் தனமாகத் தூதர் மூலம் அவர்களை இப்போதே அயோத்திக்கு அனுப்பி விட்டு, நீ சுகமா இரு. என் வாக்கு ஒரு காலத்திலும் பொய்க்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்! கர்மவிதியின் போக்கை அவ்வளவு சுலபமாகத் தெரிந்துகொள்ள முடியாது, எனவே நடக்கப்போவது நடந்துதான் தீரும்'', என்று புத்திமதி கூறிச் சென்றார்.

இராவணனும் பிரம்மதேவரின் அறிவுரை யின்படி உண்மை தெளிவுபட்டதுடன், பயமும் அவனைஆட்கொண்டான். 'விதியை வெல்ல முடியாது; எல்லோருக்கும் நேரும் மரணம் எனக்கும் என்றாவது ஒரு நாள் நேரத்தான் போகிறது' என்ற எண்ணத்துடன் இராவணன் அப்போதே தூதுவர்களை அழைத்து அந்த மூவரையும் விரைவில் அயோத்தியில் கொண்டு போய் விட்டு வரச் சொன்னான்,

இராவணன் கான மழை பொழிந்து ஈஸ்வரனை துதித்து பற்பல வரங்களைப் பெற்றவன். அதில் ஒன்று, 'எக்காலத்திலும் அண்ட சராசரங்கள் அழிந்தாலும் இலங்கை மாநகரம் மட்டும் அழியக் கூடாது என்பதாகும்.

சிவபெருமான் வரத்தையும் கொடுத்து கூடவே ஒரு சிவலிங்கத்தையும் கொடுத்தார். ''கீழே வைக்கா மல் எடுத்துச் செல்ல வேண்டும்; இல்லை என்றால், வைத்த இடத்திலேயே சிவலிங்கம் ஊன்றிவிடும்''. என்ற நிபந்தனையையும் கூறினார் ஈஸ்வரன்.

இராவணன் தபோவலிமையால் பெற்றவரங் களால், தனக்கும், தனது பதவிக்கும் ஆபத்து ஏற்பட்டு விடும் என்று அஞ்சிய இந்திரன் தேவாதி தேவர் களுடன் கலந்தாலோசித்து விநாயகப் பெருமானிடம் சென்று இராவணனை எப்படி தோற்கடிப்பது என்று வினவினார். அந்தணச் சிறுவனாக வேடம் தரித்து விநாயகப் பெருமான் இலங்காதிபதிக்குப் பாடம் கற்பிக்க புறப்பட்டார். லிங்கத்தை எடுத்து வந்து கொண்டிருந்த இராவணன் முன் சென்றார். களைத் திருந்த இராவணன் ''இந்த சிவலிங்கத்தை சற்று நேரம் வைத்துக் கொள்! இந்தக் குளிர்ந்த நீரில் நீராடி விட்டு வந்து விடுகிறேன்; தயவு செய்து கீழே மட்டும் வைத்து விடாதே''! என்று உதவிடக் கேட்டதும். அந்தணச் சிறுவன் ''ஐயா''! விரைவாக வந்து விடுங்கள்; இக்கணமான சிவ லிங்கத்தை வெகு நேரம் தூக்கி வைத்து இருக்க முடியாது'' என்றான்.

ஆனால் சிறிது நேரத்திலேயே லிங்கத்தைக் கீழே வைத்து அதனால், இராவணனின் பெருங் கோபத்துக் குள்ளாகி தலையில் குட்டுப்பட்டான். விநாயகப் பெருமான் தமது சுயரூபத்தை எடுத்து ஆயுதங்களால் இலங்கேஸ் வரனை வாட்டி வதைத்து விட்டார். அசுரர் குல மன்னன் நடுநடுங்கி விட்டான்.

''என் தலையில் குட்டியது போலவே நீயும் உனது தலையில் குட்டிக் கொள்; உன்னைப் போல் தவறுகளை உணர்ந்து தலையில் குட்டிக் கொள் வோர்க்குத் தலைமேல் ஆபத்து வந்தாலும் தடுத் தாட்கொள்வோம்''! என்ற விநாயகப்பெருமான் அப்பொழுது அருள்பாலித்தார்.

இராவணேஸ்வரன் வழிபட்ட பிள்ளையார் இன்றும் திருக்கோகர்ணத்தில் உள்ளது.

இலங்கையை ஆண்டு வந்த இராவண னுக்கு அவன் உள்ளத்தில் ஓர் ஆசை தோன்றியது. ''தேவர்கள் எனக்கு அடங்கி பயந்து நடக்கிறார்கள்; பல அசுரர்களை நான் வென்றிருக்கிறேன் என்றா லும் பக்கத்திலேயே இருக்கும் தமிழ்நாடு மட்டும் இன்னும் என் ஆட்சியின் கீழ் வராமல் இருக்கிறது. இதற்கு நான் ஏதாவது செய்ய வேண்டும். விரைவில் தமிழகத்தை வென்று அதை நான் என் ஆட்சிக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும்'', என்று நினைக்க லானான். அதைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் தனக்கு நெருக்கமான சிலரை அழைத்துக்கொண்டு இராவணன், தமிழகத்தை ஆராய வேண்டும் என்று வந்தான். முதலில் பொதிகை மலைக்கு வந்த இராவணன் அங்கே முதல் முறையாக அகஸ்திய முனிவரைச் சந்தித்தான். இராவணனைப் பார்த்ததுமே அகஸ்தியர் அவன் யார் என்பதையும் புரிந்து கொண்டார்.

இராவணன், அகஸ்திய முனிவரைப் பார்த்து ''தவ வலிமையால் ஒப்பற்ற சிவபெருமானிடமிருந்து ஒப்பற்ற தமிழ் மொழியைப் பெற்ற அகஸ்திய முனிவருக்கு வணக்கம்'' என்றான்.

அகத்தியரும், ''சிவபெருமானைக் குறித்துப் பல வகையான தவங்கள் இயற்றி, அதன் பயனாய் மூன்று கோடி வருடம் ஆயுளைப் பெற்றுள்ள இராவணன் என் இருப்பிடத்துக்கு வந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்....! வர வேண்டும் வர வேண்டும்'' என்று வரவேற்றார்.

இராவணன், தானே வெளிப்படையாகத் தன் உள்நோக்கத்தைச் சொல்லும் படி செய்தார் அகத்தியர் ''ராவணா! இலங்கையில் இருக்க வேண்டிய நீ, இப்போது தமிழ் நாட்டுக்கு வந்திருப்பதன் நோக்கம் என்னவோ?'' என்றார்.

இராவணனும், ''முனிவர் பெருமானே! தமிழகத்தை என் ஆட்சிக்கு உட்படுத்த எண்ணி இருக்கிறேன். அதன் பொருட்டு நிலைமையை ஆராய வந்துள்ளேன்'' என்றான்.

அகத்தியரும், ''ராவணா! நீ யாழ் வாசிக்கும் இசையில் பெரும் வல்லவனல்லவா'', என்று கேட்டார். ராவணனும், ''ஆம்! பெரும் வல்லவன் தான். அதிலென்ன சந்தேகம்''? என்றான். அதற்கு அகத்தியரும், ''அப்படியானால் முதலில் நீ என்னை யாழ் இசையில் வென்றால் மட்டுமே, தமிழகத்தை வெற்றிக்கொள்ள நினைக்கும் உன் எண்ணம் ஈடேறும், இல்லாவிட்டால் உன் ஆசை நிறைவேறாது,'' என்றார். அதற்கு இராவணன், ''அப்படியானால் தாங்கள் கூறுவது போலவே தங்களிடம் யாழ் வாசிப்பதில் போட்டியிடுகிறேன்,'' என்றான்.

அகத்தியருக்கும், இராவணனுக்கும் யாழ் வாசிப்பதில் போட்டி நடைபெறப் போகிறது என்ற செய்தி எங்கும் பரவியது. 'இராவணன் யாழ் வாசிப்பதில் நிகரற்றவன் என்ற செய்தி உலகம் முழுவதும் அறிந்த ஒரு செய்தியாக விளங்கியது. ஆனால் அகத்தியருக்கு யாழ் வாசிக்கத் தெரியும் என்பதையே மக்கள் இப்போதுதான் கேள்விப்பட்டார்கள்.

இசைப்போட்டிக்கு உரிய மேடை அமைக்கப் பட்டது. போட்டியைக் காண மக்கள் பலரும் கூட்டமாக வந்திருந்தார்கள். இராவணன் தனக்கு வேண்டியவர்கள் புடைசூழ அமர்ந்திருந்தான். போட்டியும் ஆரம்பமாயிற்று.

அகத்தியரும், ''ராவணா! முதலில் நீ யாழ் வாசிக்கிறாயா, அல்லது நான் வாசிக்கட்டுமா?'' என்று கேட்டார். இராவணனுக்கு யாழ் வாசிக்கும் தன் திறமையில் அபாரமான நம்பிக்கை; ஆகவே புன் சிரிப்புடன் அவன், அகத்தியர் தோற்கப்போவது என்னவோ நிச்சயம்; ஆதலால் முதலில் அவர்தான் வாசிக்கட்டுமே என்று எண்ணி ''முதலில் யாழை எடுத்து நீங்களே வாசியுங்கள்; தாங்கள் யாழ் மீட்டும் சிறப்பால் என் உள்ளம் உருக வேண்டும்,'' என்றான்.

அதற்கு அகத்தியரும், ''ராவணனே! உன் உள்ளம் உருகுகிறதா, இல்லையா என்பதை வெளியில் இருப்பவர்கள் எப்படித்தெரிந்து கொள்ள முடியும்? இதோபார்! எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அனைவரின் கண்களின் முன்னால் இந்தப் பொதிகை மலையையே சிவபெருமானின் திருவருள் துணைகொண்டு என் யாழ் இசையினால் உருக வைக்கிறேன்'' என்றார்.

அதன்படி புடைசூழ் அமர்ந்திருந்த இராவணனின் முன்னால் அகத்தியர் யாழை எடுத்து மீட்டத் தொடங்கினார். அவர் யாழ் வாசிக்க வாசிக்க அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே பொதிகை மலை எல்லோருடைய கண்களின் முன்னால் கண்கூடாக உருகியது. இதைப் பார்த்தவர்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

இராவணனும் வியப்பில் மூழ்கினான்! பொதிகை மலையே உருகும் படியாகக் கல்லையும் கரையவைக்கும் அளவுக்கு ராவணன் யாழ் இசைப் பயிலவில்லை! அதில் தேர்ச்சியும் பெறவில்லை. ஆதலால் அவன் அகத்தியர் முன் வெட்கித் தலை குனிந்தான். அகத்தியரோ, யாழை மீட்டுவதை நிறுத்தாமல் தொடர்ந்து வாசித்துக் கொண்டே இருந்தார். இராவணன் மண்டியிட்டு, கைகூப்பி வணக்கத்துடன், ''முனிவர் பெருமானே! உங்கள் இசைக்கே நான் தோற்றுவிட்டேன்; இதற்கு மேலும் இந்த நாட்டு மன்னர்களிடம் வெற்றி பெறுவது என்பது எளிதல்ல என்பதற்குத் தாங்களும், தங்கள் இசையும் ஓர் எடுத்துக்காட்டு.....! இனி நான் தங்களிடமிருந்து விடை பெறுகிறேன். ஆசீர்வாதம் செய்து என்னை இலங்கைக்கு அனுப்புங்கள்'', என்றான். அகத்தியரும் இராவணனை ஆசீர்வதித்து, தமிழகம் அரக்கனின் ஆட்சிக்கு சிக்காமல் காப்பாற்றியருளினார்.

***

# திருநாமம்

**- டாக்டர் டி. செல்வராஜ்**

### *1. சின்னங்கள்*

விநாயகப் பெருமானின் அதிசயமான அபூர்வமான திருமேனியொன்று திருவரங்கப் பெருங் கோயிலில் இருக்கிறது. அவரது திருநெற்றியில் திருநாமமும், திருநீறும் ஒருங்கே விளங்குகின்றன. அவர் இரட்டைப் பொலிவுடன் திகழ்கின்றார்.

திருநாமம் வைணவச் சின்னம். திருநீறு சைவச் சின்னம். வைணவர்களும், சைவர்களும் அவரவர் சம்பிரதாய மரபுகளின்படி அச்சின்னங் களைத் தரித்தல் வேண்டும்.

நாராயணனது திருவடிகளின் சாயலுடையது திருநாமம்.

### 2. திருவடிகளும், திருநாமமும்

பற்றற்ற பக்குவப்பட்ட உயிர்களுக்கு இறைவனது திருவடிக்கமலங்களே சரணாலயம். முத்தி பேற்றைத் திருவடிப் பேறு என்றும் கூறுகின்றனர்.

தெய்வங்கள் தமது இடக்கைகளால் தமது திருவடிகளைச் சுட்டுகின்றனர். இந்த அமைப்பை வரத முத்திரை என்பர். உயிர்கள் திருவடிகளையே பெரும் பற்றாகப் பற்றிப்பணிந்து பரகதி அடைய வேண்டும் என்பது இதன் உட்கருத்து.

திருவடிகளின் பெருமைகளுக்கு ஓர் எல்லையே இல்லை.

திருவேங்கடம் முதலான பல திருத்தலங்களில், இறைவனது திருவடிகளையும், திருவடிச் சுவடுகளையும் பக்தர்கள் போற்றி வழிபடுகின்றனர்.

திருவள்ளுவர், திருக்குறளில், ''கடவுள் வாழ்த்து'' என்ற முதல் அதிகாரத்தின் ஆறு குறட் பாக்களில் (எண்கள் 2,3,4,7,8,10) திருவடிகளின் பல பெருமை களையும் அவற்றை வழிபடுகின்ற பக்தர்கள் பெறக் கூடிய பல பெரும் பேறுகளையும் வரையறுக் கின்றார். ஒரு சான்று :-

''பிறவிப் பெருகடல் நீந்துவர்; நீந்தார்
இறைவ னடிசேரா தார்'' (10)

இது ஆசிரியரும், மாணவரும் உரையாடும் நடையில் எழுதப்பெற்றது.

*மாணவர் :* ''இறைவனடி சேராதார் பிறவிப் பெருங்கடல் நீந்துவரோ?'' ஐயவினா.

*ஆசிரியர் :* ''நீந்தார்.'' ஒரு தலைத் துணிந்த எதிர்மறை விடை, வினா விடை அணி. எனவே, பிறவிப் பெருங்கடலை நீந்துவதற்கும், கடப்பதற்கும் இறைவனது திருவடிகளைத் தவிர வேறு புணை இல்லை.

நாராயணனின் அணுக்கத் தொண்டர்களான கருடாழ்வாரைப் ''பெரிய திருவடி'' என்றும், அனுமனைச் ''சிறிய திருவடி'' என்றும் ''திருவடி'' என்ற பெயரோடு சார்த்திச் சிறப்பிக்கின்றனர்.

இராமனது திருவடிப்பாதுகைகளைப் பரதன் பணிந்து வழிபட்டான்.

கம்பராமாயணம், சுந்தர காண்டத்தில், ''திருவடி தொழுத படலம்'' திருவடியைத் தொழ வேண்டிய கட்டாயத் தேவையைக் காட்டுகிறது.

திருவடிச் சுவடுகளைச் சடாரியின் ''திருமுடி'' மேலும் தரிசிக்கலாம்.

திருவடிகளின் பெருமைகளைக் காட்டுகின்ற பெரியாழ்வாரின் பாசுரம் ஒன்று (5:2:8) வருமாறு :-

ஏதங்கள் ஆயின எல்லாம்
இறங்க விடுவித்து என்னுள்ளே
பீதக ஆடைப் பிரானார்
பிரம குருவாகி வந்து
போதில் கமலவன் னெஞ்சம்
புகுந்தென் சென்னித் திடரில்
பாத இலச்சினை வைத்தார்
பண்டன்று பட்டினம் காப்பே''

பொருள் : (2) பட்டுப் பீதாம்பரங்களை அணிந்த நாராயணன், மெய்ஞ்ஞானப்பிரம குருவாகி எனது உள்ளத்தின் உள்ளே நுழைந்தார். (1) அங்கே அந்தரங்கமாகப்படர்ந்து செறிந்த அழுக்குகள் தாமே அழியும்படி அருள்புரிந்தார். (3,4) மேலும், எனது வன்மையான உள்ளம் ஒரு மென்மையான தாமரை; அது ஒரு கோயில். அக்கோயிலில் எழுந்தருளினார். என் தலைமீது தம் திருவடி முத்திரைகளைப் பதித்தார். முன்னர்ப் பாதுகாப்பு இல்லாத எனது உடலுக்கு, அந்த முத்திரைகளே பாதுகாப்பாக அமைந்துவிட்டன.

நாராயணனின் திருவடிகள் தலைமீது படிவது திருவடித்தீட்சை; நெற்றியின் மீது பதிவது திருநாமம்.

### 3. திருநாமம்

**(1) நெற்றி :** இறைவன் படைத்த மனித உடலின் எல்லா உறுப்புகளும் பயனுடையவை; தேவையானவை. இவற்றுள் நெற்றி சில தனிச்சிறப்புகளைக் கொண்டது.

முகத்திற்கு அழகைத் தருவது நெற்றி. அந்த நெற்றிக்கு ஒரு தெய்வீகப் பொலிவைத் தருவது சமயச் சின்னம். இந்தச் சமயச் சின்னத்தைத்தரிக்க வேண்டும் என்பதற்காகவே இறைவன் அருளிய உறுப்பு நெற்றி.

நெற்றியின் மையம் இறைவன் உறைகின்ற பீடங்களில் ஒன்றாகும். இங்கே குங்குமம் முதலிய திலகங்களை அணிகின்றனர். குங்குமம் இலக்குமியின் உறைவிடம். ஆகவே, இவளுக்குத் திலகவதி, குங்குமச் செல்வி என்ற பெயர்கள் அமைந்தன.

நெற்றியின் நடுப்பகுதியில் உயிர்த்துடிப்புடைய சில நரம்புகள் உள்ளன. இறைவனைத் தியானிக்கின்ற போது இவை மெல்லச் சூடாகின்றன. இச்சூட்டைத் தணிக்க, நரம்போட்டத்தின் மீது குளிர்ந்த சந்தனம் முதலியவற்றால் சமயச் சின்னங்களைப் புனைகின்றனர்.

**(2) புண்டரம் :** மலைமேலுள்ள மண், கடற்கரை மண், ஆற்றங்கரை மண், திருத்தல மண், புனித நில மண், புற்றுமண், வெள்ளிய மண், துளசிச் செடியடி மண் முதலிய மண் வகைகளால் நெற்றியில் புனைகின்ற குறிக்குப்புண்டரம் என்பது பெயர். இது (1) திரிபுண்டரம் (2) ஊர்த்துவ புண்டரம் என இருவகைப்படும்.

**(1) திரிபுண்டரம் :** நெற்றியில், மூன்று பட்டைகளாக, இடவலமாத் தரிக்கின்ற திருநீறு திரிபுண்டரம்.

**(2) ஊர்த்துவ புண்டரம் :** ஊர்த்துவம் - மேல் நோக்கியது. நெற்றியில் மேல் நோக்கிப் புனைகின்ற நாமம் ஊர்த்துவ புண்டரம்.

மண் வகைகளால் சில பயன்கள் விளைகின்றன.

(1) வெண்ணிற மண் - விஷ்ணுபக்தி.

(2) செந்நிற மண் - வசியம்.

(3) பச்சைநிற மண் - செல்வச்செழிப்பு.

ஊர்த்துவ புண்டரங்களை

1. விளக்குச்சுடர் 2 மூங்கில் இலை 2. செந்தாமரை அரும்பு 4 வெண்தாமரை இதழ் 5 மீன் 6 ஆமை முதலிய அவரவர் விரும்பிய வடிவங்களில் புனையலாம்.

புண்டரங்களை விரல்களால் புனைகின்ற போது விளைகின்ற பயன்கள் வருமாறு :-

1. பெருவிரல் - ஆரோக்கியம்
2. சுட்டுவிரல் - மோட்சம்
3. நடுவிரல் - ஆயுள் விருத்தி
4. மோதிரவிரல் - விரும்பிய உணவு.

சுண்டு விரலையும், நகங்களையும் பயன்படுத்தக் கூடாது.

**(3) திருநாமம் - பெயர் விளக்கம் :** திருநாமம், திருமண், திருமண்காப்பு என்ற பெயர்கள் நாமத்தைக் குறிக்கப் பயன்படுகின்றன.

**(1) நாமம் :** இச்சொல் தமிழில் பெரு வழக்கிலுள்ள வடசொல். இதற்குத் திருமண், பெயர், அச்சம், புகழ் முதலிய பொருள்கள் உள்ளன.

நாராயணனின் பன்னிரு திருநாமங்களை உச்சரித்தபடி, உடலின் பன்னிரு இடங்களில் புனைகின்ற திருமண் காப்புக்குத் திருநாமம் என்பது காரணப்பெயராம்.

**(2) திருமண் :** தெய்வத்தன்மையுடைய, இலட்சுமிகரமான, கண்டவரால் விரும்பப்படுகின்ற வெள்ளிய மண் திருமண். ''திருநீற்றைப் போல திருமண்ணும் செல்வம், இளமை, உலகம் முதலியவற்றின் நிலையற்ற தன்மையை உணர்த்துகிறது. இது உடலுக்கும், உயிருக்கும் கவசக்காப்பாக விளங்குவதால் இதனைத் ''திருமண் காப்பு'' என்றும் சிறப்பித்துக் கூறுகின்றனர்.

''நாமம்'' என்ற சொல் கம்பராமாயணத்திலும் (பால காண்டம், கடிமணப்படலம் பாடல் 49) ''திருமண்'' என்ற சொல் திருவேங்கடத்தந்தாதியிலும் (பாடல் 99) அமைந்து வரக்காணலாம்.

**(4) நாமம் - அமைப்பு விளக்கம் :**

*(1) ஸ்ரீ சூரணம் :* நாமத்தின் நடுவிலுள்ள இலட்சுமியின் சின்னம்; அவள் விரும்பி, நிலைத்து உறைகின்ற இடம்.

மங்கலமான மருத்துவக் குணங்கள் நிறைந்த மஞ்சளை மூலப் பொருளாகக் கொண்டு உருவாக்கப் படுவது ஸ்ரீ சூரணம். இதனை வீடுகளில் புனிதமாக உருவாக்கிக் கொள்வது உத்தமம்.

*(2) பட்டைகள் :* ஸ்ரீ சூரணத்தின் இரு பக்கமுள்ள வெள்ளிய நிறப்பட்டைகள் இரண்டும் நாராயணனின் திருவடிச் சுவடுகளாம்.

ஆகவே, நாமம் என்பது இலட்சுமியும், நாராயணனும் வீற்றிருக்கின்ற ஒரு கோயிலே. அந்த இரு பெருந் தெய்வங்களின் மாற்று வடிவமே நாமம். இதனை மிகவும் புனிதமாகப் போற்றி வழிபடுவது முறையும், கடமையும், பொறுப்பும் ஆகும்.

மைசூர் மாநில நாராயணபுரத்தில் (மேல் கோட்டை) அதிகமாகக் கிடைக்கின்ற வெள்ளை நிற நொய்ம்மையான மண்ணால் நாமக்கட்டி செய்யப் படுகிறது. இதுவும் மருத்துவத் தன்மையுடையது. நோய்களைக் குணமாக்க வல்லது.

**(5) நாமங்களைப் புனைகின்ற முறைகள் :**

(1) நாமங்களைப் புனைவதற்குரிய காலமும், இடமும், பொருள்களும் புனிதமாகவும் தூய்மை யாகவும் இருக்க வேண்டும்.

(2) உடல் தூய்மையாக இருக்க வேண்டும். உள்ளம் பக்தியால் நிரம்பி, நாமங்களை முறைப்படி புனையவேண்டும் என்ற ஆர்வத்துடிப்புகளுடன் இயங்க வேண்டும்.

(3) நாராயணனைத் தலைமேல் எழுந்தருளச் செய்து, தியானிக்க வேண்டும்.

(4) நாமங்களிலுள்ள பட்டைகள், வளைவு கள் முதலியன தெள்ளத் தெளிவாகப் புலனாகும்படி புனைய வேண்டும். ஏற்ற இறக்கங்கள் இருத்தல் ஆகாது.

(5) ஸ்ரீ சூரணத்திற்கும், அதன் இருபக்கமுள்ள இரு பட்டைகளுக்கும் இடையிலுள்ள இரு இடை வெளிகள் பொருத்தமான, போதுமான அளவு இருக்க வேண்டும். அந்த இடைவெளிகள் மிகக் குறுகி இருப்பதும் குற்றம். மிக அகன்று இருப்பதும் குற்றம். அவை சமமாக இருப்பது பொருத்தம்.

(6) பன்னிரு திருநாமங்களைப் புனைகின்ற போது உச்சரிக்க வேண்டிய நாராயணனின் பன்னிரு திருநாமங்கள் வருமாறு :-

1. ஓம் கேசவாய நம :
2. ஓம் நாராயணாய நம :
3. ஓம் மாதவாய நம :
4. ஓம் கோவிந்தாய நம :
5. ஓம் விஷ்ணுவே நம :
6. ஓம் மதுசூதனாய நம :
7. ஓம் திரிவிக்கிரமாய நம :
8. ஓம் வாமனாய நம :
9. ஓம் ஸ்ரீதராய நம :
10. ஓம் ரிஷிகேசாய நம :
11. ஓம் பத்மநாபாய நம :
12. ஓம் தாமோதராய நம :

(7) திருநாமம் புனைய வேண்டிய பன்னிரு இடங்கள்

1. நெற்றி
2. வயிறு
3. மார்பு.
4. உள்கழுத்து
5. வயிற்றின்வலம்
6. வலக்கையின் மேல் பாகம்
7. வலக்கழுத்து
8. வயிற்றின் இடம்
9. இடக்கையின் மேல் பாகம்
10. இடக் கழுத்து
11. முதுகின் அடிப்பாகம்
12. பிடரி

தீட்சை பெற்றவர்கள் பன்னிரு நாமங்களைப் புனைய வேண்டும். நாமங்களுக்கு நீள அளவுகளும் இருக்கின்றன. இக்காலத்தில், அந்த அளவுகளைப் பெரும்பாலோர் பின்பற்றுவதில்லை. நெற்றியின் அளவுக்குத் தகுந்தபடி நாமத்தின் அளவும் இருந்தால் அதுவே போதும். நாமத்தின் அழகிய அமைப்பும்

அளவும் பழக்கத்தால் இயல்பாகவே அமைந்து விடும்.

(9) இரு பட்டைகள் இல்லாமல் ஸ்ரீசூரணத்தை மட்டும் நாமமாகப் பலர் புனைகின்றனர். இலட்சுமித் தாயாரின் திருநாமங்களைக் கூறியபடி ஸ்ரீசூரணத்தைத் தரிக்க வேண்டும்.

ஸ்ரீ சூரணம் இல்லாமல் இருபட்டைகளை மட்டும் நாமமாகப் புனையும் மரபில்லை.

ஸ்ரீ சூரணத்துடன் நாமம் பொலிவதே வைணவ மரபு.

### (6) நாமங்களைப் புனைவதால் ஏற்படுகின்ற பயன்கள்

1. நாமம் வைஷ்ணவப் பக்திக்குச் சான்று.
2. நாமம் புனைந்தவர் நாராயணனின் அடிமை என்பதை எடுத்துக்காட்டுகிறது.
3. முகத்திற்கு ஒரு தெய்வீகப் பொலிவைத் தருவது நாமமே.
4. நாமத்தில் நுட்பமாய் நிறைந்துள்ள மருத்துவக் குணங்களை உடல் ஈர்த்துக் கொள்கிறது. அதனால், நோய்கள் அகலுகின்றன; பிணிகள் தணிகின்றன. அவை மீண்டும் உடலைத் தாக்காமல் தாங்குகின்ற காரணத்தால் நாமம் உடலின் காப்பு.
5. நாமத்தைப் புனைய உள்ளத்தில் தூய்மை தேவை. அது அல்லனவற்றை அகற்றி நல்லனவற்றை நயந்து, அத்தூய்மையைப் படிப்படியே மேம்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய தூய உள்ளத்திற்கு நாமம் ஒரு காப்பு.
6. நாமம் உயிரைப் பற்றிய தீவினைகள் முதலியவற்றை வேரோடு களைகின்றது. அதைப் பக்குவப் படுத்துகிறது. நாராயணனின் திருவடிகளில் சரணடையத் துடிக்கின்ற உயிருக்கு நாமம் ஒரு காப்பு.
7. உடல் முதலியவற்றிற்கு நாமம் ஒன்றையே கவசக் காப்பாகப் புனைந்தால் போதும். வேறு காப்புகள் தேவையில்லை.
8. நாமங்களைப் புனைந்து, ஆசார ஒழுகலாறுகளை முழுவதும் போற்றுகின்ற வைணவச் சான்றோர்கள் மற்றவர்களுக்கு முன்னோடிகளும், வழி காட்டிகளும் ஆவர்.
9. நாமங்களின் வடிவில், உடலெங்கும் இலட்சுமி எழுந்தருளுகின்ற போது, நாராயணனின் திருவடிகள் பதிகின்ற போது உடல் சிலிர்க்கிறது; உள்ளம் பூரிக்கிறது. இத்தகைய சுகானுபவங்களை வைணவப்பக்தர் உணரத்தான் முடியும். அவற்றை விளக்கமாகச் சொல்லவும் முடியாது; சொல்லியும் முடியாது.
10. நாமம் இம்மையில் இன்பம் தரும்; மறுமையில் பேரின்பம் தரும்; முடிவில் முத்திப்பேரின்பம் தரும்.

### (7) பஞ்ச சமஸ்காரம்

வைணவர்கள் போற்ற வேண்டிய சமஸ்காரங்கள் ஐந்து. அவை வருமாறு :-

1. சங்கு, சக்கர இலச்சினைகளை இரு தோள்களிலும் பதித்தல் வேண்டும். (தாபம்)
2. நெற்றியில் திருமண் காப்பிடுதல் வேண்டும். (புண்டரம்)
3. 'தாசன்' என்ற பெயரைச் சூடுதல் வேண்டும். (நாமம்)
4. நாராயணனின் திருமந்திரங்களை ஓதுதல் வேண்டும். (மந்திரம்)
5. நாராயணனை ஆராதித்தல் வேண்டும். (அர்ச்சனை)

மேற்குறித்த ஐந்து அங்கங்களையும் நிறைவேற்றுகின்றவரே ''ஐயங்கார்'' ஆவர்.

நெற்றியில் திருமண காப்பிடுதல் ஒரு கடமையாக விதிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

கம்பராமாயணத்தில் நாமம் :

பன்னிரண்டாம் நூற்றாண்டில் கம்பராமாயணம் தோன்றியது. இதில் 'நாமம்' என்ற சொல் முதன் முதல் அமைந்து வருகின்றது.

இராமன் திருமணக் கோலங்கொண்டு, தனது திருநாமத்தைத் தானே புனைந்து வந்தானாம்.

''தன் திருநாமத்தைத்
தானும் சாத்தியே''

**(பாலகாண்டம், கடிமணப்படலம் 49)**

இப்பாடல் சில பதிப்புகளில் உண்டு; பல பதிப்புகளில் இல்லை. எனவே இதனை மிகைப் பாடல்'' என்று பலரும் கருதுகின்றனர்.

**(4) வடகலை தென்கலைப் பிரிவுகளில் நாமம் :** கி.பி. பதினான்காம் நூற்றாண்டில், வைணவத்தில் வடகலை, தென்கலை என்ற இரு பிரிவுகள் கிளைத்தன. இதனால் நாமங்களும் இருவகைப் பட்டன.

**(1) வடகலை :** வடகலைப் பிரிவைத் தோற்றுவித்தவர் வேதாந்த தேசிகர். இப்பிரிவினர் வடமொழி வேதநூல்களைப் போற்றுகின்றனர். இவர்கள் வளைவுடன் கூறிய பாதமற்ற நாமத்தைத் தரிக்கின்றனர். இவர்களில் சிலர் சிவப்பு நிறச் சூரணத்திற்குப்பதிலாக மஞ்சள் நிறச் சூரணத்தை அணிகின்றனர்.

**(2) தென் கலை :** தென்கலைப் பிரிவைத் தோற்றுவித்தவர் மணவாள மாமுனிகள். இப்பிரிவினர் ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களைப் போற்றுகின்றனர். இவர்கள் பாதத்துடன் கூடிய நாமத்தைத் தரிக்கின்றனர்.

நாமம் எப்போது தோன்றியது என்பதைத் துல்லியமாகக் கணித்துக்கூறப் போதிய சான்றுகள் இல்லை. நாமம் தோன்றிய பின்னர்க் காலப் போக்கில் அதன் வண்ணத்திலும், வடிவத்திலும் சிறு சிறு மாற்றங்கள் நிகழ்ந்தன என்பது தெரிகின்றது.

**5. சில பெயர்களில் நாமம் :** நாமம் என்ற பெயரோடு சார்ந்து வழங்குகின்ற இடப் பெயர்கள் சில உள்ளன.

**(1) நாமகிரி :** சேலம் அம்மாப்பேட்டைக்கு அருகில் உளளது ''நாமகிரி'' என்ற மலை. இந்த மலையில் மிகப்பெரிய பாறையில் நாமத்தை வரைந்து வழிபடுகின்றனர். தமிழகத்திலுள்ள மிகப்பெரிய நாமம் இதுவாக இருக்கலாம்.

**(2) நாமக்கல் (நாமகிரி) :** சேலத்திலிருந்து தெற்கே 50 கி.மீ தூரத்தில் நாமக்கல் இருக்கிறது. இது வைணவத்தலம். தாயார் - நாமகிரி லட்சுமி.

சேலம், நாமக்கல்லைச் சூழ்ந்த பகுதிகளில் வாழ்கின்ற மகளிர் பலருக்கு ''நாமகிரி'' என்ற பெயர் வழங்குகிறது.

நாமகிரிப்பேட்டை என்ற பெயரிலும் ஓர் ஊர் இருக்கிறது. இத்தகைய பெயர்களால் நாமத்தின் பெருமைகள் கூடுதலாகின்றன.

**6. உயிரினங்களும் நாமமும் :**

**(1) நாகம் :** ''நாகம், நாராயணன்'' சென்றால் குடையாம்; அமர்ந்தால் சிங்காசனமாம்; நின்றால் பாதுகையாம்; கிடந்தால் புணையாம்; மணிவிளக்காம்; பூம்பட்டாம்; அணையாம்.'' (முதல் திருவந்தாதி 53.) இவ்வாறு எப்போதும் இறைவனுடன் இருக்கின்ற நாகத்திற்கு நாமம் ஒன்று இயல்பாகவே இருப்பது மிகப் பொருத்தமே.

**(2) யானை :** திருமால் கோயில்களில் வாழ்கின்ற யானைகளுக்குத் திருமண்காப்பிடுகின்றனர்.

**(3) பசு :** கிராமப்புற மக்கள் புனிதமான நாள்களில், பசுக்களை நீராட்டிக்குங்குமத்தால் திலகத்தையும், மஞ்சள் அல்லது சந்தனத்தால் நாமத்தையும் சூட்டுகின்றனர்.

**(4) அணில் :** இராமன் இலங்கைக்குப் பாலம் கட்டியபோது, அணில் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தது. அவன் அந்த அணிலைப் பாராட்டி அன்புடன் அதன் முதுகில் நீவினான். அவனது மூன்று விரல்களின் சுவடுகள் அந்த அணிலின் முதுகில் பதிந்து, நாமத்தைப் போலக் காட்சி தருகின்றன.

**7. எங்கும் எதிலும் நாமங்கள்**

நாமத்தை நடுவிலும் அதன் ஒரு பக்கத்தில் சங்கையும், மறுபக்கத்தில் சக்கரத்தையும் வரைகின்றனர். இத்தகைய அமைப்பில், நாமத்தைப் புனைந்த நாராயணன், சங்கையும் சக்கரத்தையும் ஏந்தி அருவ நிலையில் சேவை சாதிகின்றான்.

நாராயணனுடன் தொடர்புடைய பதாகைகள் முதலியவற்றில் நாமங்களைப் பதிக்கின்றனர்.

தலைவாயிலின் மேற்புறத்திலும், இரு பக்கங்களிலும் மஞ்சளால் நாமங்களை எழுதுகின்றனர். இதனால் பேய் பிசாசுகள் வீட்டினுள் நுழைவதில்லை.

நாமம் நாராயணனின் திருவடிகளாக இருப்பதால் அந்தப் புனிதமான (திரு) அடி உதவுவதைப் போல அண்ணன் தம்பிகள் கூட உதவுவதில்லை.

* * *

# ஆடிய பாதம்

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

ஆடியதும் ஏனோ? – நடனம்
ஆடியதும் ஏனோ?



ஆடிய பாதம் அசைவினில் அண்டம்
ஆடிடும் உண்மையை அறிந்திடச் செய்யவோ?
பாடிய பாடலும், பண்ணுடன் முழங்கிடத்
தேடிய அடியார் திருக்கண் நிறைக்கவோ? 1
(ஆடியதும் ஏனோ?)

இருகால் பளுவை ஒரு கால் தாங்க,
பெரும்புவி ஈர்க்கும் பெரிய சக்தியின்
அரும்பெரும் உண்மையை அகிலம் உணர்ந்திட,
உருவமாய், உவமையாய் ஒளிர்ந்திடும் விளக்கமோ? 2
(ஆடியதும் ஏனோ?)

அண்டங்களை ஈர்க்கும் அரும்பெரும் சக்தியால்,
அண்டங்கள் சுழலும் அரும்பெரும் உண்மையும்,
விண்ணும், மண்ணும் விரிந்த பிரபஞ்சமும்,
ஒன்றோ டொன்றாய் ஒன்றியதை உணர்த்தவோ? 3
(ஆடியதும் ஏனோ?)

உடம்பின் சோம்பலால் உயிரும் தூங்கிடும்
மடமையில் மாந்தரும் மடிவதைத் தடுக்கவோ?
கடமையைச் செய்வதே கடவுளின் ஆணை
கடவுளின் ஆணையைக் காட்டிடச் செய்யவோ? 4
(ஆடியதும் ஏனோ?)

ஆடலால் பாடலால் ஐயனை அடைந்திடும்
ஆடியே காட்டிடும் அதிசயம் நிகழ்த்தவோ?
ஆடலும், பாடலும் ஆன்மீகச் சோலையில்
அரும்பிடும் மலர்களாய் அறியவும் வைக்கவோ? 5
(ஆடியதும் ஏனோ)?

துதித்துப் போற்றும், தூய மனத்தை,
மதித்து என்றும் மகிழச் செய்யவோ?
சதிபதி சகிதமாய்த் தாண்டவம் ஆடி,
சதிபதி வாழ்முறை தழைத்திடச் செய்யவோ? 6
(ஆடியதும் ஏனோ?)

ஆன்மீகப் பற்றுடையார் அனைத்தையும் துறந்தே,
ஊன்உருகப் பாடுவதால் உளம்மகிழச் செய்யவோ?
''தான்'' என்ற மமதையில் தத்தளிப்போர் இனம்கண்டு,
கோல்ஆடத் தான்ஆடும் குரங்குமனம் காக்கவோ? 7
(ஆடியதும் ஏனோ?)

நன்மையைக் காத்துத் தீமையைக் கொன்று,
இன்பம் இறைவழி என்பதை இயம்பவோ?
அன்பால் என்றும் அறவழி வெல்லும்
துன்பமே இல்லாச் சொர்க்கம் காட்டவோ? 8
(ஆடியதும் ஏனோ?)

தன்னிக ரில்லாத் தாண்டவம் உலகில்,
இன்னிசை முழங்கும் ஏழ்கடல் குலுங்க,
மண்ணும், விண்ணும் மகிழ்ந்தே ஆட,
மண்டும் இன்பம் மலர்ந்திடும் நோக்கமோ? 9
(ஆடியதும் ஏனோ?)

காணக் கிடைக்காக் காட்சியைக் காட்டவோ?
காணாத கண்களும் கண்டு மகிழவோ?
பேணாத இன்பப் பிறவிப் பெரும்பயன்,
தேனாகச் சொரிந்து, தெவிட்டாமல் இருக்கவோ 10
(ஆடியதும் ஏனோ?)

ஆடியதும் ஏனோ? – நடனம்
ஆடியதும் ஏனோ?

(முற்றும்)

* * *

# மேல்சேவூர் அருள்மிகு மங்களாம்பிகை உடனுறை ரிஷபபுரீஸ்வரர் திருக்கோயில்

- வெ. இராமமூர்த்தி

அருள்மிகு மங்களாம்பிகை அம்மன் உடனுறை செம்பொருளாம் சிவமாகிய முழுமுதற் கடவுள் ரிஷபபுரீஸ்வரர் திருக்கோயில் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம் மேல்சேவூர் என்னும் கிராமத்தில் எழுந்தருளியுள்ளது. அந்நாளில் ஆவூர், விடையூர் என்றழைக்கப்பட்ட இவ்வூர் செஞ்சியிலிருந்து சுமார் 22 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. செஞ்சியிலிருந்து செல்ல தனிப் பேருந்துகள் உள்ளன. திண்டிவனம் இரட்டணை செல்லும் பேருந்தில் கொங்கரப்பட்டு என்ற கிராமத்தில் இறங்கியும் செல்லலாம். செஞ்சி வழியாக ஓடும் சங்கராபரணி என்னும் ஆற்றின் மேல் அமைந்துள்ள புண்ணியத்தலமாகும். தேவாரம் பாடிய மூவருள், தொண்டா சீர் தொகை விரித்த சுந்தரர், இத்தலத்தைப் பாடிப் பரவிய இடம், இன்றும் ''சுந்தரா நத்தம்'' என்றும் வழங்கப்படுதலால் அவர் வழிபட்ட சிறப்பினை உடையதாகும். இப்பழம் பெருங்கோயில், கி.பி. 928ம் ஆண்டில், தில்லைக்குப் பொன் வேய்ந்த முதல் பராந்தக சோழனால் கட்டப்பட்டதால் இதன் தொன்மையும், புகழும் அறியலாம்.


## கோயில் அமைப்பு

முந்தைய ஐந்து நிலையுடைய மேற்கு நோக்கிய இராஜ கோபுரம் சிதலமடைந்ததால், குடமுழுக்கு விழாவின் போது கலசங்களுடன் கூடிய மூன்று நிலைக் கோபுரமாகப் புதுப்பித்துள்ளனர். கோபுரத்தில் சுதை வண்ண வேலைகள், சிவபெருமான் உமை அம்மை திருவிளையாடல்கள், போன் சிற்பங்கள் எழிலார்ந்தன வாகும். நுண்ணிய வேலைப்பாடு. கோபுர வாயிலைக் கடந்தால் பெரிய வெளிச் சுற்று. தலமரம் புன்னை யாகும். வெளிச் சுற்றில் விநாயகர் சந்நிதியும், மலர்த் தோட்டமும், கருங்கல் மடப்பள்ளியும் தெற்கிலும், கிழக்கிலும் ஈஸ்வரன் கோயில் மகா மண்டபமும் அமைந்துள்ளன. அறுபது கல் தூண்கள் அடங்கிய அம்மண்டபத்தில், ஒவ்வொரு கல்தூணிலும், கடவுள், அடியவர் மற்றும் தலப்புராணச் சிற்பங்களையும் காணலாம்.

ஆற்றிலிருந்து நன்னீர் எடுத்துவரப் படிகள் அமைந்திருப்பினும் இப்பொழுது அடைக்கப்பட்டுள்ளன. செப்புத் தகடு பொருத்திய உயர்ந்த கொடி மரம், பலிபீடம், சிவபெருமானை நோக்கி அமர்ந்துள்ள அழகிய அதிகார நந்தி; வாயில் முகப்பில் வினை தீர்க்கும் விநாயகரும், முருகப்பிரானும், இருமருங்கில் அமர்ந்து அருளாட்சி புரிகின்றார்கள். மேற்புறத்தில் நரசிம்மர்; கல் தூண்களின் கீழ் யாளி உருவம் உள்ளதால் பல்லவ மன்னர் களும் பிற்காலத்தில் கட்டியுள்ளமை தெளியலாகும். வாயிற் காவலர்கள் சுமார் 9 அடி உயரத்தில் காவற் புரிவது மிகப்பெரிய, அரிய சிற்பங்களாகும். கர்ப்பக் கிரகத்தின் உள்ளே செஞ்சிக்கும், பாண்டிச்சேரிக்கும் செல்ல ஓர் சுரங்கப் பாதை உள்ளதென்பர். உள் மண்டபத்தில் சிவன், சோமாஸ் கந்தர், கணபதி, முருகன், நால்வர் நடராசர் போன்ற சிலைகள் வைப்பதற்குரிய உயரிய திண்ணைகள் உள்ளன; இச்சிலைகள் பாதுகாப்புக் கருதி ஆங்கு இல்லை. கோயில் வளர்ச்சிக்கும், வழிபாட்டிற்கும் குறிசொல்லி, ஆன்மிக நெறி வளர்த்த பாபு அடிகளார் என்பவர் பாடிய பாடல்கள் கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ளன. கருவறையில் விடையேறும் வித்தகனாம் ரிஷப புரீஸ்வரர், ஆதிகைலாய லிங்கமாக அமர்ந்து அருளாட்சி புரிகின்றார்.

''ஆதி கைலாய லிங்கம் அமர்ந்த நல் சேவூரில்
சோதி வடிவான லிங்கம்; சொல்லரிய பெரிய லிங்கம்
மாந்தர்கள் உய்வு பெற, மாநிலத்தின் வாழ்வு பெற
சாந்தமென வந்த சதுர்யுகம் கண்ட லிங்கம்


கருவறை கருங்கற் விரிப்பின் மேல் வண்ணக் கோபுரம். கோயிலைச் சுற்றி நர்த்தன விநாயகர்; ஆலமர் தட்சிணா மூர்த்தி; இத்தலத்தை பூசித்த திருமால், பிரம்மா; துர்க்கை அம்மன் தன் பன்னிரு கைகளால் களி நடம் புரியும் சிறிய சிற்பம், சிற்பக் கலைக்கே எடுத்துக்காட்டாக இலங்கும் சிற்பம் என போற்றுகின்றார்கள். உள் சுற்றில், சூரியர், ஏழு கன்னிகைகள், சிவ பெருமானின் ஐந்து முகங்களாகிய ஈசான்யம், தத்புருடம், அகோரம், வாம தேவம், சத்யோஜதம் ஆகிய மூர்த்தங்களின் முன் நந்தியெம் பெருமான். வேத வியாசர் மகன் சுகப் பிரம்ம ரிஷிக்கு மகா சிவராத்திரியன்று 1008 சிவலிங்கள் ஒருங்கே



தோன்றி அருள்புரிந்த 1008 இலிங்கங்கள் அடங்கிய சகஸ்ர இலிங்கம். காசி விஸ்வ நாதர், வள்ளி, தெய்வானை உடனாகிய முருகப் பெருமான், இக் கோயிலைக் கட்டிய கமலமுனிவர், சோழ தம்பதியர் கள், நாகலிங்கம், நட்ராசர், கால பைரவர் சந்திரர் ஆகியோர் உள்ளே காட்சியளிக்கிறார்கள்.

வாகனக் கிடங்கையடுத்து நவக்கிரக சந்நிதி, தெற்கு நோக்கி மங்களாம்பிகை அம்மனுக்குத் தனிக் கோயில். சுமார் ஆறு அடி உயரமுள்ள அம்பிகை யின் அருள் நோக்கே உலகைக் காக்க வல்லதாகும். இதுபோன்ற அழகுத் திருவுருவம் சில கோயில் களிலேயே காணலாம். சங்கரா பரணி நதிக்கரையில், வெள்ளம் புரண்டோடி வந்து ஊரையே அழிக்கும் நிலையில் அம்மன் காலில் பட்டதும், வெள்ளம் தணிந்து ஊரைக் காத்தது அம்மனின் அருட் சக்தி யாலன்றோ? ஆகவேதான் இராமசாமி நாயுடு என்பவர் ''மங்கள வலங்கிருத சுமங்கலி ஜெகங்கள் புகழ் மங்களாம்பிகை அம்மையே'' என்று பதினொன்று பாடல்களால் ஓலைச் சுவடியில் போற்றியுள்ளார். இப்பாடல்களை ஒலிநாடா (கேசட்) வில், இன் னிசையில் கேட்டு இன்புறலாம்; கல்வெட்டுக்களி லும் காணலாம். ''மாறும் என் மனத்திடையே உறை கொள்வாய் மங்களமே'' என சேவை நகருக்கு வரு மாறு அழைக்கும் பாடல்களையும் சுவற்றில் பார்க்க லாம். துவார பாலகிகள், சிம்ம வாகனம், கடவுள் சிற்பங்கள் அடங்கிய கல்தூண்கள் தாங்கிய மண்டபம், எதிரே கட்டப்படாத கல் தூண்கள், வெளியே நாற் புறமும் நெடிதுயர்ந்த மதிற் சுவற்றின் மேல் அருகருகே நந்திகள் என்று கூறிக் கொண்டே போகலாம்.

கோயிலில் உள் மதிற் சுவர்களிலும், வெளிப் புற மதிற் சுவர்களிலும் பல்வேறு காலத்திய வரலாற்றுக் கல்வெட்டுக்கள் இருப்பது கோயிலின் பெருஞ் சிறப் பாகும். இவை கோயில், மொழி, வரலாறு பற்றிய ஆராய்ச்சியாளர்களுக்கு அரியப் பெட்டகமாகும். காலக் கண்ணாடியாகும். இக்கோயிலைக் கட்டிய மன்னன் மதுரை கொண்ட பரகேசிவர்மன் என்ற முதலாம் பராந்தக சோழன் கி.பி. 928ம் ஆண்டு கட்டினான். பின்பு ராஜராஜ கேசரி வர்மன் (கி.பி 985 - 1013) தொடர்ந்து திருப்பணிகள் மேற்கொண்டான். செங்கேணி அம்மையப்பன் பாண்டி ராஜ ராஜ சம்புவராயர் நிலத்தைக் கொடையாக கொடுத்தார். கோயிலுக்கு ஒளி விளக்குகள் ஏற்ற ராஜேந்திர சோழனும் (1012-1058), முதலாம் குலோத்துங்க சோழனும் 96, 32 பசுக்களை முறையே தானம் அளித்தமையும், கட்டிடப் பணியாளர்களுக்கு பணிக்கு நெல் அளித்தமையும், கல்வெட்டுக்களால் அறியலாம். வைணவர்களும் சைவர்களும் சமய நல்லிணக்கத்தோடு வாழ்ந்தனர் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன.



## திருவிழாக்கள்

வீரமலை சத்சங்க அன்பர்கள் ஆடி மாதத்தில் மூன்றாம் வெள்ளிக் கிழமையன்று சந்தன நிறை மண விழாவினைச் சிறப்பாக நடத்துகின்றார்கள். காலையில் முருகர் வீதியுலாவும், இரவில் மங்களாம் பிகை, ரிஷபபுரீஸ்வரர் வீதிப்புறப்பாடும் கண் கொள்ளாக் காட்சியாகும். அதேபோல் ஆடிக் கிருத்திகையில் முருக பக்தர்கள் காவடி எடுத்தும், உடலில் அலகு பாய்ச்சியும், டிராக்டரை இழுப்பதும், அவர்கள் பெற்ற அருளின் நன்றிக் கடனும், நம்பிக்கையுமாகும். மாதந்தோறும் பிரதோஷம், கிருத்திகை, சங்கடஹர சதுர்த்தி போன்ற விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. அண்ணாமலைக்கு கிரி வலம் வரும் சிவநேயச் செல்வர்கள், தாங்கள் வரும் வழியிலுள்ள இக்கோயிலுக்கு வந்து சேவித்தால் நன்மை அடைவர். கோயிலும் சிறக்கும். இவ்வூர் திருவாதிரை திருவிழாவில் ரிஷபபுரீஸ்வரரும், மங்களாம்பிகை யும் ஒன்றாகப் புறப்பட்டு, வீதியுலா வருகையில், கங்கையைச் சடையில் கரந்ததைக் கண்ணுற்ற அம்மன் தானும், தன் பிள்ளைகளோடு கோபத்தால் பிரிந்து கோயில் வந்தடைவர். தமக்கும் பரவை நாச்சியாருக்கும் ஏற்பட்ட பிணக்கைத் தூது சென்று தீர்த்த சிவபிரா னிடமே, அவர் தோழனாகிய சுந்தரர் மூன்று முறை தூது சென்று பிணக்கைத் தீர்க்கும் ஆதிரை நாள் விழா சுந்தர விழாவாக நடைபெறுகின்றது.

## தல வரலாறு

திரு அமரர் கர்ணம் குட்டியாப்பிள்ளை எழுதிய தல வரலாற்றின் சுருக்கம்.

கயிலையில் வாழும் கண்ணுதற் கடவுள் மண் உள்ளோர் வணங்க ஆதி கயிலாய லிங்கமாக அகனமர்ந்து உறையும் ஊர் ஆலூர் எனவும், விடை யூர் என்று வழங்கிவந்த இந்த மேல் சேவூராகும். துர்வாசர் சாபத்தால், சாபம் நீங்க, தாதையை தாளற வீசிய சண்டிகேஸ்வரர் கமல முனிவராகத் தோன்றி இவ்வூர் இலிங்கத்தை வழிபட்டார். திரு நந்தித் தேவர் காமதேனு என்னும் தெய்வீகப் பசுவின் வயிற்றில் பிறந்து, முகம் மட்டும் ரிஷபம் போலும் மற்ற உறுப்புகள் மானிட கணம் போலும் பிறந்ததால், ரிஷப நாதர் என்ற பெயர் பெற்று, கமல முனிவருக்குத் துணைபுரிய சேவூர் வந்தடைந்தார். முனிவரையும், இலிங்கத்தையும் புற்று மூடியதால், தன் காலால் புற்றைக் கீறக்கால் குளம்புபட்டு, இரத்தம் பீறிட்டு எழ, சங்கரனை கங்கை வரவழைத்து, சுத்திக்கரித்த லால், சங்கராபரணி என்று அந்நதி பெயர் பெற்றது. காலின் குளம்பு பட்ட காயத்தை இலிங்கத்தில் இன்றும் காணலாம். மற்றும் மகாவிஷ்ணுவும், சிவபெருமானின் திருவடியைக் காணாது. அகங்காரம் தணிய, சேவூர் சிவனை வணங்க, ஏற்பட்ட நதியே வராக நதி என்று பெயர் பெற்றது. பிறகு முனிவர் சோழ மன்னன் அருளால் கோயில் கட்டினார். தேவ கணங்களில் ஒன்றாக சோமனும், அவன் தங்கை குண சம்வர்த்தினியும் சேவூருக்கருகில் உள்ள சிங்கவரத்தில் ஆட்சி செய்த போது, தேவேந்திரன் விரும்பி அவளைத் துரத்த, சம்வர்த்தினி வெறிகோலமாக சுரங்க வழியாக சேவூர் சென்று, ஓம குண்டலத்தில் மங்களமாக இறங்கி மங்களாம்பிகை என்று பெயர் பெற்றாள். ஆங்கு ரிஷப நாதருக்கும் குண சம்வர்த்தினிக்கும் திருமணம் சிறப்பாக நடை பெற்றது. பாண்டிச்சேரி யிலுள்ள செட்டியார்கள் இக்கோயிலை பராமரித்தது, செப்புத் தகட்டால் அறியலாம்.

தகைமையுடன் மேல் சேவூர், தலப் புராணத்தை
புகழுடனே கற்றோர் பொருளடைவர்; திகழுமருள்
செய்ய ரிஷபேசர் திருவடியை சேவித்தோர்
வைய மிசை வாழ்வர் மகிழ்ந்து''

என்பது வாரியார் சுவாமிகள் வெண்பாவாகும்.

* * *

# திருமண வரம் நல்கும் திருவிடந்தை அருள்மிகு நித்தியகல்யாண சுவாமி திருக்கோயில்

- சீ. வசந்தி, எம்.ஏ., எம்.பில்.,

### இருப்பிடம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சென்னை மகாபலிபுரம் செல்லும் வழியில் சுமார் 42 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிறிய அழகிய அமைதி தவழும் கிராமம் திருவிடந்தை ஆகும். திருவிடந்தைக்குக் கோவளத்திலிருந்தும், மகாபலி புரத்திலிருந்தும் செல்லலாம். திருவிடந்தையைக் கிழக்கில் கடலும், மேற்கில் செழுமையான நிலங் களும், தெற்கில் கோவளமும், வடக்கில் மகாபலி புரமும் எல்லைகளாகச் சூழ்ந்து நிற்கின்றன. இவ் வூர் கடற்கரை அருகில் உள்ளதால் மணற்பாங்காக, நெய்தல் நிலத்திற்குரிய அனைத்துத் தன்மை களுடன் விளங்குகின்றது. தற்போது பயிர்த் தொழில் அதிகம் செய்யப்படவில்லை. ஆயினும் கடற்கரை நிலத்திற்கு உரிய பனை, முந்திரி, சவுக்கு, ராகி, முலாம்பழம், தர்பூசணி போன்றவைகள் பயிரிடப் படுகின்றன. இவ்வூர் மக்களின் மிக முக்கியமான தொழில் மீன் பிடித்தல் ஆகும்.

### தல வரலாறு

மகாவிஷ்ணு உலகம் உய்ய எடுத்த அவதாரங் களில் மூன்றாவது அவதாரம் வராக அவதாரம் ஆகும். திருவிடந்தையில் எழுந்தருளியுள்ள இறை வர் வராக மூர்த்தி ஆவார். திருமலை - திருப்பதியி லும், நாமக்கல்லிலும், மகாபலிபுரத்திலும், விஷ்ணு வராக வடிவில் வழிபாடு செய்யப்படுகிறார். மகாவிஷ்ணுவின் வராக அவதாரம் சதபத பிராமணத் தில்தான் முதன் முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இறைவன் மூஷ்ணன் என்ற பன்றி வடிவம் கொண்டு பூமியினைத் தாங்கியதாக இந்நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. வேதகாலத்திற்குப் பிற்பட்ட மற்றொரு நூலான தைத்தரிய ஆரண்யத்தில் இறைவன் கருப்பு நிற பன்றி உருவத்துடன் 100 கரங்களுடனும் புவி யினைத் தூக்கியதாகக் கூறப்பட்டுள்ளது. இதிகாசங் களில் ஒன்றான இராமாயணத்திலும் வராக உருவில் இறைவன் எழுந்தருளியமைப் பற்றி அறியப்படு கின்றது. விஷ்ணு புராணம், லிங்கப் புராணம், கருட புராணம் ஆகிய புராணங்கள் கடலிலிருந்து பூமி யினை பிரம்மா வெளிக் கொணர்ந்ததாகவும் இவரே மகாவிஷ்ணு என்றும் குறிப்பிடுகின்றன.

பண்டைய காலத்தில் திருவிடந்தைக்கு வாமன புரி எனப் பெயர் வழங்கப்பட்டது. அக்காலத்தில் மேகநாதன் என்ற அசுரன் இருந்தான். அவனது மகன் பலிச்சக்கரவர்த்தி ஆவான். பலிச்சக்கரவர்த்தி உலகினைத் தர்ம சாஸ்திரத்தின் படி, முறையாக ஆட்சி புரிந்து வந்தான். இவனது நண்பர்கள் ஆன மாலி, மான்யவன், சுமாலி ஆகிய மூவரும் தேவர்களுக்கு எதிரான போரில் தோல்வியடைந்து பலிச்சக்கரவர்த்தியிடம் சென்று அடைக்கலம் புகுந் தனர். தனது நண்பர்களுக்காக பலிச்சக்கரவர்த்தி தேவர்களுக்கு எதிராக போரிட நேரிட்டது. இதனால் ஏற்பட்ட பாவத்தினைப் போக்க-பலிச்சக்கரவர்த்தி திருவிடந்தையில் தவம் புரிந்தான். மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்து பலியின் முன்பு தோன்றி அவனுக்கு வேண்டிய வரங்களை அளித்தார். இவ் வூரின் அழகில் மயங்கிய இறைவன் திருவிடந்தை யிலேயே தங்கி விட்டார்.

முன்னொரு காலத்தில் கால்வன் என்ற முனிவர் கூனி என்ற பெண்ணை மணம் புரிந்து கொண்டார். அவர்களுக்கு 360 பெண் குழந்தைகள் பிறந்தனர். இவரின் பெண்கள் திருமண வயது அடைந்ததும் அவர் களுக்குத் திருமணம் புரிய வேண்டியிருந்ததால் தமது மகள்களுடன் வாமனபுரி என அக்காலத்தில் வழங்கப் பட்ட திருவிடந்தைக்கு வந்து இறைவனை வேண்டி னார். இறைவன் அம்முனிவருக்கு அருள் வழங்க வேண்டி கஸ்யப்ப கோத்திரத்தில் பிறந்த ஒரு அந்தண இளைஞர் உருவில் வந்து கால்வ முனிவரின் முதல் மகளை மணம் புரிந்து கொண்டார். பொதுவாக புதி தாக திருமணமான மணமக்கள் முதன் முதலில் கோயிலுக்கு சென்று இறைவனை வழிபடுதல் மரபு. இவ்வாறே இளைஞர் உருவில் வந்த இறைவனும், மணப்பெண்ணும் திருவிடந்தை கோயிலுக்குச் சென்று வழிப்பட்டனர். கோயிலுக்குச் சென்ற தம்பதியர்கள் கருவறையினுள் மறைந்து விட்டனர். இதே போல் 360 பெண்களையும் மணந்து கொண்ட

இறைவன் முன்னர் போலவே கருவறைக்குள் சென்று மறைந்துவிட்டனர். இதனால் வருத்தமுற்ற முனிவர் தமது 360 பெண்களும், மருமகன்களும் எவ்வாறு மறைந்தனர் என்று அறிய விரும்பினார். திரு விடந்தை கோயில் கருவறைக்குள் சென்று பார்த்த பொழுது மகாவிஷ்ணு வராக மூர்த்தியாக 360 பெண் களையும் தொடையில் அமர்த்திக் காட்சியளித்தார். அத்துடன் அவர்கள் அனைவரையும் ஒன்றாக்கி மகாலஷ்மியாக தனது இடப்புற தொடையின் மீது அமர்த்தி அருள் வழங்கினார். இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடும் வகையில் இன்றும் இக்கோயிலில் 360 நாட்களும் திருக்கல்யாண உற்சவம் நடைபெறு கிறது. இதனாலேயே இறைவன் நித்ய கல்யாண சுவாமி என்று வழங்கப்படுகிறார். இவ்வூர் இறை வன், அசுரனின் தலைவனான, பலிச்சக்கரவர்த்திக் கும் கால்வ ரிஷிக்கும், மார்கண்டேயருக்கும், அருள் பாலித்தார் என்பது திருத்தலப் புராணமாகும்.

## இடப்பெயர்

திருவாகிய இலக்குமியை இடப்பக்கத்தில் சிறப்புடன் ஏந்தியுள்ளதால் திருவிடந்தை என இறைவன் பெயராலேயே ஊர் பெயர் வழங்கப் படுகின்றது. திருவிடந்தைப் பற்றி திருமங்கை ஆழ்வார் ''ஏரார் பொழில் சூழ் இட வெந்தை'' எனக் குறிப்பிடுகின்றார்.

கல்வெட்டுக்களில் திருவிடவெந்தை என்று வழங்கப்பட்டுள்ளது. கி.பி 14 ஆம் நூற்றாண்டில் அசுர குலகால நல்லூர் எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்ட செய்தி கல்வெட்டுகளின் வழியாக அறியப் படுகின்றது.

## இறைவன் திருப்பெயர்

கருவறை இறைவன் வராகப் பெருமாள் ஆதி வராகப் பெருமாளாக வழிபாடு செய்யப்படுகின் றார். மூலஸ்தானத்து இறைவனைத் திருவிடந்தை தேவன் எனவும் மணவாளப் பெருமாள் எனவும் கல் வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் மணவாளப் பெருமாள் என்ற பெயர் நித்திய கல்யாணப் பெருமாள் என வழங்கப் பட்டுள்ளது.

## இறைவி

திருவிடந்தையில் இறைவன் தொடைமீது இருத்தியுள்ள இறைவியின் திருநாமம் அகில வள்ளித் தாயார் என அழைக்கப்படுகின்றாள். கல்வெட்டுகளின் மூலம் பட்டாகி (துர்க்கை) திரு உருவம் அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப் பட்ட செய்தி அறியப்படுகின்றது. ஆயினும் கருவறை இறைவன் வராக நாயனார் என்றும் இறைவி நாச்சியார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளாள்.

நித்திய கல்யாண பெருமாள் உற்சவர் ஆவார். கோமள வல்லி தாயாருக்கும், ஆண்டாளுக் கும் தனிச்சன்னதிகள் உள்ளன.

**தீர்த்தம் :** வராகதீர்த்தம் கோயிலிலிருந்து, சாலைக்குச் செல்லும் வழியில் உள்ளது. கோயிலின் அருகிலும் சிறிய திருக்குளம் காணப்படுகின்றது.

**தலவிருட்சம் :** புன்னை மரமே இத்தலத்தின் தலவிருட்சம். இது கருவறையின் பின்புறம் உள்ளது.

## இலக்கியம்

வைணவ திருப்பதிகள் 108இல் ஒன்றான இத்திருத்தலம் திருமங்கை ஆழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பெற்றது. மேலும் நூற்றியெட்டுத் திருப்பதி அந்தாதிகளிலும் புகழ்ந்து பாடப்பட் டுள்ளது.

## திருமங்கையாழ்வார் வரலாறு

வைஷ்ணவ ஆழ்வார்களில் ஒருவரான திரு மங்கையாழ்வார், தமிழகம், மற்றும் வட இந்தியா வில் பல திருத்தலங்களுக்கும் சென்று அத்தலங் களில் இருக்கும் இறைவனைப் புகழ்ந்து பாடிப் பரவு கின்றார். இவர் இறைவன் அருளால் மகாவிஷ்ணு வின் பக்தனாக மாறியவர். இவரது மனைவி குமுத வல்லியும் மகாவிஷ்ணுவின் பக்தையாவார். இவர் கள்ளர் மரபில் பிறந்து அவர்களுக்குத் தலைவனாக விளங்கினார். வைணவர்களின் திவ்விய சூரிய சரித்திரம் என்ற நூலில் ஸ்ரீரங்கம் கோயிலில் திருச் சுற்றுச் சுவர் இவரால் கட்டப்பட்டது எனக் கூறப் பட்டுள்ளது. இவர் எழுதிய பாடல்கள் பெரிய திருமொழி (1084 பாசுரங்கள்), திருக்குறுந்தாண்டகம் (20 பாசுரங்கள்), திருநெடுந்தாண்டகம் (30 பாசுரங் கள்), திருவெழு கூற்றிருக்கை (1 பாடல்) சிறிய திரு மடல் (40 பாசுரங்கள்), பெரிய திருமடல் (78 பாசுரங் கள்) ஆகியவை நாலாயிர திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில் உள்ளன. இவர் தஞ்சையில் உள்ள ஆழி நாட்டில் குறையாத்தூர் என்ற இடத்தில் பிறந்து திருநெல்வேலி மாவட்டத்தில் திருக்குறுங் குடி என்ற இடத்தில் தமது கடைசி காலத்தைக் கழித்ததாக அறியப்படுகின்றது. திருமங்கையாழ் வார் கலிகன்றி, கலியன், பரகாலன் எனப்பல பெயர்களால் வழங்கப்பட்டுள்ளார்.

திருமங்கை ஆழ்வாரின் பாடல்களில் பல வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன. இவரது சம காலத்தவரான பல்லவ மன்னனான இரண்டாம் நத்திவர்மன், சாளுக்கியர் மற்றும் பாண்டியருடன் நடத்திய போர்கள் பற்றிய பல செய்திகள் இவரது பாடல்களின் மூலம் அறியப்படுகின்றன. கோயில் நகரங்களான காஞ்சி, திருக்கோவிலூர், நாங்கூர், கும்பகோணம், திருமலை மற்றும் சிதம்பரம் ஆகிய திருத்தலங்களைப் பற்றிப் பலப்பாடல் களைப் பாடியுள்ளார். கடல் மல்லை பதிகத்தில் மாமல்லபுர துறைமுகத்தில் நடைபெற்ற வாணிகம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவர் மட்டுமே பல வரலாற்றுச் செய்திகளை தமது பாடல்களில் குறிப் பிட்டுள்ளதால் திருமங்கை ஆழ்வாரை அக்காலத்திய வரலாற்று ஆசிரியராகக் கூட கருதலாம். குரு பரம் பரையின் கூற்றுப்படி இவர் 105 ஆண்டுகள் வாழ்ந்த தாக அறியப்படுகிறது.

திருமங்கை ஆழ்வாரின் பாடல்களின் பெரும் பாலும் பெண்கள் இறைவனிடம் கொண்டிருக்கும் காதலையே பத்தியில் காதல் ரசம் சொட்டச் சொட்ட தெரிவிப்பவைகளாக அமைந்துள்ளன. திருவிடந்தை பதிகத்தில், திருமங்கையாழ்வார் தன்னை செவிலித் தாயாக எண்ணித் தன் மகளான தலைவி, வராக பெருமாள் மேல் கொண்ட காதலை வெளிப்படுத்தும் பாடல்களைப் பாடியுள்ளார். அத்தலைவியின் நிலை யினையும் அழகாய்ச் சித்தரித்துக் காட்டியுள்ளார். இறைவனையே நினைத்திருந்தால் உலக இன்பங் களில் ஈடுபாடு கொள்ளாமையால் அவளது உடல் நலம் அழிந்து, துயரடைந்ததாகப் பாடுகின்றார். மேலும் திருவிடந்தை இறைவன், அப்பெண்ணின் மீது இரக்கம் கொண்டு அவளை மணம் புரிய வேண்டுமாய் விண்ணப்பிக்கின்றார். திருமங்கை யாழ்வார் திருவிடந்தை இறைவனை அவர் செல்லும் இடத்தில் எல்லாம் நினைவு கூர்ந்துபடிப் பரவு கின்றார். (பிற்சேர்க்கை I)

சிறிய திருமடலில் திருவிடந்தை பற்றி

''காரார் குடந்தை கடிகை
கடன் மல்லை
ஏரார் பொழில்சூழ் இடவெந்தை
நீர்மலை''

என்று பாடியுள்ளார்.

## மழை வேண்டி பிரார்த்தனை செய்வோம்

''வான்முகில் வழாஅது பெய்க!
மலிவளம் சுரக்க! மன்னன்
கோல் முறை அரசு செய்க!
குறையிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்''

— கந்தப்புராணம்

பெரிய திருமடலில்,

''தென்னீர்க் கடல் கிடந்த தோளா மணிச்சுடரை
என் மனத்து மாலை இடவெந்தை ஈசனை''

என்றும் பாடிப் பரவுகின்றார்.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் அழகிய மணவாள தாசர் எனப் பெயர் பெற்ற திவ்விய கவி பெருமாள் பிள்ளை அய்யங்கார் தமது நூற்றியெட்டுத் திருப்பதி அந்தாதியில், திருவிடந்தை இறைவன் பாவங்கள் அனைத்தையும் அழித்தவனாகவும், இவரது திரு நாமத்தைக் கேட்டு, கோயிலுக்குச் செல்லும் அனை வரது பாவங்களும் ஓடிவிடும் என்றும் பின்வரு மாறு குறிப்பிட்டுள்ளார்.

''நின்று திரியும் பிறவியெல்லா நேர்வித்துக்
கொன்று திரியுங் கொடுவினையா - ரின்று
வெருவிட வெந்தைக்கே விழுமிய தொண்டானேன்
திருவிட வெந்தைக்கே செறிந்து''

மற்றொரு நூற்றியெட்டுத் திருப்பதி அந் தாதியில் இவ்விறைவன் 3000 முனிவர்களுக்கும், மார்கண்டேயனுக்கும் பிறருக்கும் அருளை வாரி வழங்குபவனாகவும் இத்திருக்கோயில் கோவளத் திற்கு அருகில் இருப்பதாகவும் குறிப்பிடப்பட் டுள்ளது. ஸ்ரீகுரவை இராமாநுஜ தாசர் என்ற வைணவப் பெரியார், தாம் இயற்றிய நூற்றியெட்டு அந்தாதி திருப்புகழில், 92-ஆவது திருப்புகழில் திருவிடந்தை இறைவனை புகழ்ந்து பாடியுள்ளார். இவ்வாறு திரு விடந்தையின் வரலாற்றுக்குப் பல இலக்கியங்கள் அணி செய்பவைகளாகத் திகழ்கின்றன.

* * *






திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயிலில் 19.5.2003 திங்கட் கிழமை அன்று ''திருஞானசம்பந்தர் இசை விழா'' மிகச் சிறப்பாக நடைபெற்றது. உதவி ஆணையாளர் திருமிகு பி. வாசுநாதன், எம்.ஏ., பி.எல். அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள். செங்கை சட்டமன்ற உறுப்பினர் திருமிகு திருக்கச்சூர் கே. ஆறுமுகம், பி.எஸ்சி. அவர்கள், திருக்கழுக்குன்றம் ஒன்றியப் பெருந்தலைவர் திருமிகு பி.வி.கே. வாசு அவர்கள், திருக்கழுக்குன்றம் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமிகு வீ. வேலாயுதம் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

''நகைச்சுவைத் தென்றல்'' பேராசிரியர் மா. இராமலிங்கம் அவர்களை நடுவராகக் கொண்டு ''திருஞானசம்பந்தர் ஆற்றிய அரும்பணியில் நம்மைப் பெரிதும் வியப்புறச் செய்வது அவர் தம் மக்கள் பணியா? மகேசன் பணியா?'' எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. ''திருக்கோயில்'' இதழாசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், திருப்புகழ்மாமணி கவிஞர் மதிவண்ணன், கவிஞர் மு.க. சங்கரன், கவிஞர் திருக்குமரன், கவிக்கோ பகீரதன், திருமதி மஞ்சுளா தியாகராஜன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு வ.ச. மறைமலை அவர்கள் ''திருஞானசம்பந்தர் இசைவிழா'' ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்து இருந்தார்.

பதிவு எண். TN/PMG (CCR) / 707 / 03-05/WPP No 451






மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் திருப்பணியைக் காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும், தமிழ் வளர்ச்சி, பண்பாடு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் இ.ஆ.ப. அவர்களும், இணை ஆணையாளர் (திருப்பணி) திருமிகு ப. ராஜா பிஎஸ்.சி.பிஎல். அவர்களும் சென்னை இணை ஆணையாளர் திருமிகு மு.க. பாலசுப்பிரமணியம் பி.ஏ. பி.எல் அவர்களும் இத்திருப்பணித் தொடக்க விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயில் துணை ஆணையாளர் / செயல் அலுவலர் திருமதி ந. திருமகள் எம்.ஏ.பிஎல். அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.